
Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் – 24 இதழ் – 3 மார்ச் 2011

தனிப் பிரதி ரூ. 8/-



ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!!

# பதினான்காவது வேனிற்கால வேதாகம முகாம் மற்றும்
# திருமறை தியானம் நேயர்கள் & திருமறை ஆசான் வாசகர்கள் கருத்தரங்கம்

## இடம் : *YMCA* வளாகம், ஏலகிரி மலை (வேலூர் மாவட்டம்)

## நாள் : மே மாதம் 2,3,4 - 2011 (திங், செவ், புதன்)

### சிறப்பம்சங்கள்

* கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு,தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
* தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.
* ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.
* பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்
* கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.
* வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்
* குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.
* பெண்களுக்கு தனி இடவசதி.
* சிறுபிள்ளைகளை உற்சாகப்படுத்த பரிசுகளுடன் கூடிய போட்டிகள்.

**உணவும், தங்குமிடமும் இலவசம்**

__பதிவுக்கட்டணம் :__ பெரியவர்கள் ரூ. 125/ சிறியவர்கள் ரூ. 75/

கிறிஸ்துவின் சபை, 288, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.
Ph : 04257-230030 Cell : 98427-30382, 99655-30385

குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

## ஆசானின் போதனையில்....


1. ஆசிரியர் உரை ........................................ 1
2. வேனிற்கால வேதாகம முகாம் ........................ 9
3. ஏன் சுவிசேஷம் இரட்சிப்பதற்கு ........................ 10
4. பெண்கள் பகுதி ........................................ 16
5. வாலிபர் பகுதி ........................................ 19
6. சிறுவர் பகுதி ........................................ 22
7. உலகத் தோற்றத்திற்கு முன்னமே .................... 24
8. துருவின் சாட்சி ........................................ 26
9. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ......... 29


## BIBLE MEDITATION
### TV PROGRAM

| | |
|---|---|
| TAMILAN TV - | Saturday 7.15 am. |
| IMAYAM TV - | Sunday 5.00 pm. |
| TAMILAN TV - | Monday 7.00 am. |

### வாசகர்களின் அன்பான கவனத்திற்கு

* ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
* முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
* இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
* M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் உங்கள் தெளிவான விலாசத்தை கண்டிப்பாக எழுதவும்.

– ஆசிரியர்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 24 MARCH - 2011 Issue - 3


ஆசிரியர் உரை

## ஆவியின் கனிகள் பதினொன்று

கனி அல்லது பழம், கனி வகைகள் அல்லது பழ வகைகள் ஆதியிலிருந்து மனித இனத்தால் வயது பேதமின்றி விரும்பப் படும் ஓர் உணவு வகையாக இருந்து வருகிறது. இப்படி விரும்பப் படுவதற்கான காரணம் என்னவென்று நாம் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், இது மனிதனுக்கான தேவ திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. ஆம், இப்பூமியில் வாழும்படியாகத் தன்னால் படைக்கப்பட்ட மனிதனின் ஆரோக்கிய வாழ்விற்குப் பிரதானமான ஆகாரமா யிருக்கும்படி உண்டாக்கப்பட்டவைகள் தான் கனி வகைகள். பரிசுத்த வேதாகமத்தின் முதல் அதிகாரத்திலேயே இவ்வுண் மையை நாம் வாசித்து அறிந்து கொள்ள முடியும். பின்னும் தேவன்; இதோ பூமியின் மேல் எங்கும் விதை தரும் சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன். அவைகள் உங்க ளுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது (ஆதி. 1:29) என்றார். அடுத்த வசனத்தில், மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், ஊரும் பிராணிகளுக்கும் எவை ஆகாரமாயிருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார். அதில் கனி வகைகள் இல்லை. ஆக, கனி வகைகள் மனிதனின் சரீர நலனுக்காகவே படைக்கப்பட்டவை.

ஆனால், தேவனால் படைக்கப்பட்ட மனிதன் வெறுமனே சரீரத்தை மாத்திரம் உடையவனல்ல. மனிதனை மண்ணினாலே உருவாக்கின தேவன், ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதி, அவனை ஜீவாத்துமாவாக்கினார் (ஆதி. 2:7) இதன் மூலம் அவன், அழிந்து போகும் சரீரத்தையும், அழியாத ஆத்துமாவை யும் உடையவனானான். அழிந்து போகும் சரீரத்தைக் காட்டிலும், அழியாத ஆத்துமா மேன்மையுடையதாக, நித்தியத்தன்மை கொண்டதாக இருக்கிறபடியால் தான் இயேசு ஆண்டவர், "மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டா லும், தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?" (மத். 16:26) என்று கேட்டுள்ளார்.

இப்படி சரீரத்தையும், ஆத்துமாவையும் கொண்டுள்ள மனிதனின் ஆரோக்கியமான சரீர வாழ்வுக்கு விருட்சங்களின் கனிகள் எப்படி அவசியமோ, அப்படியே அவனுடைய ஆன்ம ஆரோக்கியத்துக்கும் கனிகள் அவசியமாகிறது. இந்தக் கனி களைத் தான் நாம் "ஆவியின் கனிகள்" என்கிறோம். இந்த ஆவியின் கனிகள் புதிய ஏற்பாடு என்னும் தோட்டத்தின் பல வசனப் பகுதிகளில் காய்த்து, கனிந்து தொங்குகின்றன (கலா. 5:22-23; கொலொ. 1:10, பிலி. 1:10, எபே. 5:9). இவ்வசனப் பகுதிகளில், எபேசியர் 5:9-ஐ நாம் ஆதாரமாகக் கொண்டு, ஆத்துமாவுக்கான இக்கனிகள் பற்றி மேலும் தெரிந்து கொள்ள முயற்சிப்போம்.

பவுலடியார் கலாத்தியருக்கு எழுதின நிருபம் 5-ம் அதிகா ரத்தில், ஆவியின் கனிகள் என்று ஒரு பட்டியலை ஆவியான வரின் ஏவுதலால் கொடுக்கிறார். அப்பட்டியல், ஒரு கிறிஸ்த வனிடம் இருக்க வேண்டிய பக்திப் பண்புகளை படம் போட்டுக் காட்டுகிறது. ஆவியின் கனிகள் என்றால் இந்த ஒன்பது மட்டும் தான் என்று பொதுவாகக் கிறிஸ்தவ சமுதாயத்தால் அறிந்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இம்மாத தலைப்புக்கான எபேசியர் 5:9-க்கு நாம் வரும்போது, கலாத்தியரின் ஒன்பது பக்திப் பண்புகளும் "சகல நற்குணம்" என்ற தலைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு, அத்தோடு நீதி, உண்மை ஆகிய இரண்டை யும் சேர்த்துப் பார்க்கிறோம். ஆகவே தான், 9+2 என்று நான் கணக்கிட்டு, ஆவியின் கனிகள் பதினொன்று என்று தலைப்பிட்டி ருக்கிறேன். அவ்வளவே. சொல்லப்போனால், வேத வசனங்களை அடிப்படையாகக் கொண்டு, ஆவியின் கனிகள் என்று மேலும் பல பக்திப் பண்புகளை இந்த எண்ணிக்கையோடு கூட்ட முடியும்.

முதல் நூற்றாண்டில் வாழ்ந்த எபேசு பட்டணத்துக் கிறிஸ்த வர்கள், ஒரு வகையில் இருபத்தோராம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர் களைப் பிரதிபலிப்பவர்களாக இருந்துள்ளார்கள். அதாவது, ஒரு கிறிஸ்தவனுக்குரிய பாக்கியமான நிலையை அறியாமல், கிறிஸ்து வுக்குள் கிடைக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களின் மேன்மையை உணராமல், அந்த பாக்கியத்தையும், மேன்மையையும் அந்நியப் படுத்தி, ஆவிக்குரிய ரீதியில் தரித்திரர்களாக வாழ்ந்துள்ளார்கள். இச்சீர்கெட்ட நிலையை எப்படியாவது அவர்களுக்கு உணர்த்தி, மேம்பட்ட பக்தி நிலைக்கு அவர்களைத் தூக்கி நிறுத்த முயற்சிப்பதே இந் நிருபத்தை வெளிப்படுத்தின ஆவியானவரின் நோக்கம். பவுலடியார் அந்த நோக்கில் தான் காரியங்களைக் கொண்டு செல்கிறார். எபேசியர் 4:1-3 வசனங்கள் இதை உறுதி செய்கிறது. "நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திர வான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வ தற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" என்றுள்ளது.

இன்னும், இந்நூலை ஒட்டுமொத்தமாக கவனித்தால் கூட இதன் நோக்கத்தை அறிந்து கொள்ள முடியும். 1-3 அதிகாரங்கள் ஒரு கிறிஸ்தவனின் நிலை பற்றியும், 4-6 அதிகாரங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை நடைமுறைப்படுத்துவது பற்றியும் பேசுகிறது.

இந்த இரண்டாம் பகுதியில், பழைய மனிதனைக் களைந்து போடுங்கள் என்றும் (எபே. 4:17-22), புதிய மனிதனைத் தரித்துக்கொள்ளுங்கள் என்றும் (எபே. 4:23-29) பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள் என்றும் (4:30-5:2) அடுத்தடுத்துக் கூறிவரும் பவுலடியார், 5:3-14 வசனங்களில் எபேசியருக்குக் கண்டிப்பையும், எச்சரிக்கையையும் வெளிப்படுத்துகிறார்.

இப்படியாகப் பேசி வருபவர் தான், 5:9-ல் ஆவியின் கனிகள் பற்றிக் குறிப்பிடுகிறார். இங்கே, ஆவியின் கனி என்பது, கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படியும் ஒருவன், தேவ பக்தியில் தேர்ச்சியடைந்து, தேவனுடைய குணாதிசயங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் கொடுக்கக் கூடிய கனி. ஒவ்வொரு கிறிஸ்தவனிடமும் இக்கனிகள் இருக்க வேண்டியது அவசியம்.

இங்கே ஆவியானவர் கனி என்ற வார்த்தையை மேலான பொருளோடு பயன்படுத்துவதை நாம் கவனிக்கத் தவறிவிடக் கூடாது. கனி என்பது ஒரு சிறப்பு வார்த்தை. எந்த ஒரு விருட்சமும் எடுத்த எடுப்பில் கனி தந்து விடுவதில்லை. போடப்படும் விதை முதலாவது முளைக்க வேண்டும். பிறகு, அது ஒரு செடியாக வளரவேண்டும் அந்தச் செடி, ஒரு கொடியாகவே, அல்லது மரமாகவோ மாற வேண்டும். அதன் பிறகு, பூ பூக்க வேண்டும். பூ காயாக வேண்டும். அப்புறம் அந்தக் காய் முதிர்ந்து கனியாக வேண்டும். அதாவது, ஒரு செடி முழு வளர்ச்சி அடையும் போது தான் அங்கே கனி கிடைக்கும். வளர்ச்சி இல்லையானால், அதுவும் முழுமையான வளர்ச்சி இல்லையானால் கனி என்பது இருக்காது. ஆக, ஒரு கிறிஸ்தவன் தன் பக்தி வாழ்க்கையில் கனி கொடுக்கவில்லையென்றால், அவன் முளைத்த குழிக்குள்ளாகவே இன்னும் இருக்கிறான் என்றே பொருள். களங்கமில்லாத திருவசனமாகிய ஞானப்பாலை நாளும் பருகி, பக்தி வாழ்க்கையில் தேறாத ஒருவனிடம் ஆவியின் கனிகள் அறவே இருக்காது.

சரி, இப்பொழுது எபேசியர் 5:9-ல் சொல்லப்பட்டிருக்கும் ஆவியின் கனிகளாகிய "சகல நற்குணம்", "நீதி", "உண்மை" ஆகிய இம்மூன்றையும் நாம் தனித்தனியாகப் பார்த்து, இந்தக் கனிகள் நம்முடைய வாழ்க்கையில் இருக்கிறதா என்று சீர்தூக்கிப் பார்ப்போம்.

**I முதல் கனி - சகல நற்குணம்**

எபேசியரிடம் எதிர்பார்க்கப்பட்ட "சகல நற்குணம்" என்னும் கனி, நமக்கு என்ன பாடங்களைக் கற்றுத் தருகிறது என்று முதலாவது கவனிப்போம்.

"சகல நற்குணம்" என்னும் இச்சொற்றொடர் தேவ ஞானத்தை நமக்கு அறிவிக்கிறதாக இருக்கிறது. எப்படியெனில், "குணம்", "நற்குணம்", இந்த இரண்டையும் தாண்டிய ஒன்று தான் "சகல நற்குணம்". "குணம்" என்பது மானிடராய்ப் பிறந்த ஏனைய எல்லோருக்குள்ளும் இருக்கக்கூடிய ஒன்று. அது, நல்லதாகவும் இருக்கும், கெட்டதாகவும் இருக்கும். அடுத்து, "நற்குணம்". நிறைய "நற்குணங்கள்" உள்ளவன் என்று சொல்லப்படும் ஒருவனுக்குள்ளாகக் கூட சில கெட்ட குணங்கள் இருந்து

விடுகிறது. ஆனால், தேவ அங்கீகாரத்துக்கு ஒருவனிடம், ஒன்றிரண்டைத் தவிர, மற்ற எல்லாம் நல்ல குணங்களாக இருப்பதென்பது போதாது. ஆகவே தான், ஆவியானவர், "சகல நற்குணம்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தி, அது தான் ஆவியின் கனி என்கிறார். கலாத்தி யருக்கு எழுதின நிருபத்தில், ஆவியின் கனிகளில் ஒன்றாக "நற்குணம்" இடம் பெற்றுள்ளது. ஆனால், கலாத்தியருக்குப் பின் சில ஆண்டுகள் கழித்து எழுதப் பட்ட எபேசியரில், ஒன்பது கனிகளையும் சேர்த்துச் சாறு பிழிந்து, "சகல நற்குணம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சகல நற்குணம் என்பதற்கான பொருள் இவ்விதமாக மொழி வல்லுநர்களால் விளக்கப்பட்டுள்ளது. 1. மற்றவர்களின் நன்மைக்கான கனிவுடன் கூடிய இரக்க செயல்பாடு 2. அதே வேளையில் மிகச் சரியான செயல்பாடு. இந்த இரண்டும் சேர்ந் திருந்தால் தான் சகல நற்குணமாம். அப்படியானால், இந்த அருங் குணம் யாரிடத்தில் இருந்தது? இயேசு ஆண்டவரைக் காட்டிலும் இதற்குச் சிறந்த உதாரணம் வேறு யாரும் இருக்க முடியாது. ஏனெனில், அவரிடத்தில் தான் கனிவும், இரக்கமும் சரீர ரீதியாகவும், ஆன்ம ரீதியாகவும் இருந்தது. அத்தோடு அவரு டைய அணுகுமுறையும், செயல்பாடும் மிகச் சரியானதாகவும் காணப்பட்டது.

இயேசு ஆண்டவரின் "இரக்க செயல்பாட்டிற்கு" எடுத்துக் காட்டுகள் நற்செய்தி நூல்களில் மலிந்து கிடக்கின்றன. அவரால் நடப்பிக்கப்பட்ட ஒவ்வொரு அற்புதமும் இதற்கு அடையாளம். ஆம், குஷ்டரோகியைத் தொட்டு சுகப்படுத்தியது (மாற்கு. 1:41). பசியாயிருந்த ஜனங்களுக்காகப் (மாற். 8:2) பரிதபித்துத் திருப்தி யான ஆகாரம் தந்தது. கானா ஊர் திருமணத்தில் குறைவை மாற்றியது. (யோவான் 2 அதி.) திமிர்வாதக்காரனை சுகப்படுத்தி யது (மாற்கு 2:1-12). நாயீன் ஊர் விதவையின் கண்ணீரைத் துடைத்தது. (லூக். 7:11) என்று ஏராளம்.

இப்படி நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்த இயேசுவின் இரக்க செயல்பாடு சரீர காரியங்களோடு மட்டும் முடிந்து விட வில்லை. ஆன்ம காரியங்களிலும் இதே விதமான இரக்கம் அவரிடம் காணப்பட்டது. பூமிக்குண்டான தன்னுடைய ஊழிய நாட்களின் ஒரு சந்தர்ப்பத்தில். "அவர் திரளான ஜனங்களைக் கண்ட போது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்து போனவர்களும் சிதறடிக்கப்பட்டவர்களுமாயிருந்த படியால் அவர்கள் மேல் மனதுருகினார்" (மத். 9:36). அது மாத்திரமல்ல, மனந்திரும்ப மறுத்த எருசலேமின் குடிகளைப் பார்த்து, " எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவர் களே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று " என்று கலங்கினார் (மத். 23:37). இவைகளெல்லாம் இயேசுவின் ஆத்தும ரீதியிலான இரக்க செயல்பாட்டுக்கு எடுத்துக்காட்டுக்கள்.

சகல நற்குணத்தின் அடுத்த விளக்கம், சரியான செயல்பாடு. செயல்பாடு எல்லோரிடத்திலும் உண்டு. ஆனால், சரியான செயல்பாடு மிகவும் குறைவு. ஆவியின் கனிகள் பற்றிப் பேசும் நம்முடைய வேத பகுதியின் 11-ம் வசனம், கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள் என்று கூறுகிறது. இவ்வசனத்தின் ஆதாரமாயிருந்து கனியற்ற அந்தகாரக் கிரியைகளை இயேசுவானவர் கண்டித்து தன்னுடைய சரியான செயல்பாட்டை நிலைநாட்டியிருக்கிறார். ஆம், எருசலேம் தேவாலயத்தைக் கள்ளர் குகையாக்கினவர் களைச் சவுக்கை உண்டு பண்ணி விரட்டினார் (மத். 21:12,13). தன்னுடைய இச்செயலுக்கு அவர் வெகு ஜன ஆதரவைத் தேடிக் கொண்டிருக்க வில்லை. சரியானது என்று கண்டார். தனி ஆளாக அதைச் செய்து முடித்தார். இதுமாத்திரமல்ல, பக்தி ரீதியாக வேடம் போட்டுத் திரிந்த பரிசேயர், வேதபாரகர் போன்றோரைத் தடித்த வார்த்தைகளால் தயவு தாட்சண்யமின்றித் தாக்கி (மத். 23-ம் அதிகாரம்) சம்பந்தப்பட்டவர்களுக்கும், கூடியிருந்தவர்களுக்கும் கடுமையானதொரு எச்சரிப்பைத் தந்தார்.

அருமையானவர்களே, சகல நற்குணம் என்பதின் பொருள் இதுதான். அப்படியானால் நம்மில் எத்தனை பேருக்கு, இயேசுவைப் போன்று செயல்படும் குணாதிசயம் உண்டு. இரக்கமான செயல்பாட்டுக்கு நம்மைத் தயார் செய்ய விரும்பும் நம்மில் எத்தனை பேர், சரியான செயல்பாட்டுக்கு நம்மை ஆயத்தமாக்க விரும்புகிறோம். இக்காரியத்தில் நமக்கு ஏன் வம்பு என்று பின் வாங்குகிறவர்களாகத்தானே உள்ளோம்? இச்சிந்தை கிறிஸ்தவத்தைப் பீடித்திருப்பதால் தானே, ஆவிக்குரிய ரீதியிலான அலங்கோலங்கள் மார்க்க உலகில் தலை விரித்தாடிக் கொண்டிருக்கிறது! யதார்த்த நிலை இப்படியிருந்தால் நாம் ஆவியின் கனியுடையவர்களாக இருக்கிறோம் என்பது எப்படி நியாயமாகும்? இனியாகிலும் நாம் ஒவ்வொருவரும் இயேசுவைப் போல், சகல நற்குணம் உடையவர்களாயிருக்க நம்மை ஒப்புக்கொடுப்போம்.

**II இரண்டாம் கனி - நீதி**

எபேசியரிடம் எதிர்பார்க்கப்பட்ட "நீதி" என்னும் கனி, நமக்கு என்ன பாடங்களைக் கற்றுத் தருகிறது என்று இரண்டாவது கவனிப்போம்.

பரிசுத்த எழுத்துக்களில் காணப்படும் தேறின வார்த்தைகளில் ஒன்று நீதி என்பது. இவ்வார்த்தைக்கான பொருள், "தேவ சித்தத்தோடு இசைந்து போகக் கூடிய நிலை". இப்படி இசைந்து போகக் கூடிய ஒரு வாழ்க்கையைத் தான் இயேசு ஆண்டவர் தன் மரண பரியந்தம் நடத்தினார். ஆம், தன் இன்னுயிரைப் பலி கேட்கும் கோரச் சிலுவைக்குப் போவதற்கு முன் கெத்சமனே தோட்டத்தில் ஜெபித்த போது, அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையில் விழுந்தது. இது மருத்துவ உலகில் ஓர் அதிசயம். ஆனால், அந்த நிலையில் கூட, "பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று ஜெபித்தார். (லூக்கா 22:42). ஆம், மரண நேரத்திலும் தேவ சித்தத்துடன்

இசைந்து போகும் நிலை. இதன் பலனாக இன்றைக்குப் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

ஆவியின் கனிகளில் ஒன்றான இந்த நீதி ஒரு கிறிஸ்தவனுக்கு ஏன் அவசியப்படுகிறது? ஏனெனில், பரலோகத்தின் தேவன் நீதியுள்ளவர் என்று மாத்திரம் தேவனுடைய வார்த்தை சொல்லாமல், அவர் நீதியில் பிரியப்படுகிற தேவன் என்றும் கூறுகிறது (சங்கீதம் 11:7) தங்கள் நீதியான வாழ்க்கைக்காக பழைய, புதிய ஏற்பாடுகளில் வாழ்ந்த பலர் தேவனுடைய பார்வையில் பட்டிருக்கிறார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சகரியா, மற்றும் அவன் மனைவி எலிசபெத். இவர்கள் பக்தி வாழ்வு பற்றி வேத வசனம் சிலாகித்துச் சொல்வதைக் கொஞ்சம் கவனியுங்கள். "அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்" (லூக். 1:6).

இந்த வசனத்தைக் கூர்ந்து கவனித்தால், "நீதி" என்பதற்கான இலக்கணம் என்னவென்பது தெரியும். அதாவது, கர்த்தர் இட்ட சகல கற்பனைகளின்படி செய்வது தான் நீதி" என்று. அப்படியானால், இந்த விளக்கத்தின்படி நம்மில் எத்தனை பேர் தேவனுடைய பார்வையில் நீதியாக வாழ்ந்து கொண்டுள்ளோம்? சிந்தியுங்கள். சிலுவைக்குப் பின்னால் வாழும் நமக்குக் கர்த்தர் இட்ட கட்டளைகள், புதிய ஏற்பாட்டில் தான் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால், புதிய ஏற்பாட்டு உபதேசங்களின்படி வாழும் போது மாத்திரமே நாம் கர்த்தர் இட்ட கட்டளைகளின்படி வாழ்கிறோம் என்று பொருள்படும். மற்றபடி, நம்முடைய பக்தி அநீதியானதாகவே இருக்கும். எனவே, நம்முடைய பக்திக்குண்டான செயல்கள் அனைத்திற்கும் புதிய ஏற்பாட்டில் ஆதாரம் இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்வது அவசியம்.

நம்முடைய நீதி, தேவ நீதிக்கு உகந்ததாக இருக்க வேண்டுவது அவசியமென்பதற்கு இதோ ஓர் உதாரணம். ஒரு சமயம் விபச்சாரத்தில் கையும், களவுமாகப் பிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை பரிசேயர்களும், வேதபாரகர்களும் இயேசுவிடம் கொண்டு வந்தார்கள். இயேசுவுடனான இவர்களது உரையாடலை நாம் கவனித்தால், இவர்கள் ஏதோ தங்களைப் பெரிய நீதிமான்கள் போல் காட்டிக் கொண்டார்கள். ஆனால், இயேசு ஆண்டவர் இவர்களைப் பார்த்து, ...உங்களில் பாவமில்லாதவன் இவள் மேல் முதலாவது கல்லெறியக்கடவன்.... என்றார். இப்படிச் சொல்லித் தரையில் எழுதி அவர் மீண்டும் நிமிர்ந்து பார்த்த போது, அவள் மீது குற்றம் சாட்டினவர்கள் ஒருவரையும் காணவில்லை. ஏன்? இப்பெண்ணுக்குத் தண்டனை பெற்றுத்தரத் தீவிரித்தவர்கள் என்ன ஆனார்கள்? இந்தப் பரிசேயரும், வேதபாரகரும் தங்கள் பார்வைக்கு நீதிமான்களாக இருந்தார்கள். ஆனால், இயேசுவின் எதிர்பார்ப்பின்படி? இவர்கள் நீதி சொத்தையானதாகவே இருந்துள்ளது.

அன்பானவர்களே, இன்றைக்கு அநேகருடைய நீதி இந்த இரகத்தைச் சார்ந்ததாகத் தான் உள்ளது. தங்களுக்குத் தாங்களே நீதிமான்களாகவும், மனிதர்கள் பார்வையில் நீதிமான்களாகவும் காணப்படுகிறார்கள். ஆனால், அந்த நீதியை தேவனுடைய எதிர்

பார்ப்போடும், கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தோடும் ஒப்பிடும் போது, அது ஒன்றுமில்லாமல் போய் விடுகிறது. இப்படிப்பட்ட நீதியை உடையவர்களாக நாம் இருந்தால், நித்தியத்தை பரலோகத்தில் கழிக்கும் பாக்கியத்தை இழந்து போவோம். ஆகவே, ஆவியின் கனிகளில் ஒன்றாகிய நீதியை நாம் புரிந்து, அந்த நீதிக்கு உகந்தவர்களாக வாழ நம்மை ஒப்புக்கொடுப்போம்.

### III மூன்றாம் கனி - உண்மை

எபேசியரிடம் எதிர்பார்க்கப்பட்ட "உண்மை" என்னும் கனி, நமக்கு என்ன பாடங்களைக் கற்றுத் தருகிறது என்று மூன்றாவது கவனிப்போம்.

எபேசியர் 5:9-ல் காணப்படும் "உண்மை" என்பது, முந்தின இரண்டு கனிகளாகிய சகல நற்குணம் மற்றும் நீதி ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாக உள்ளது. ஆம், இந்த இரண்டு கனிகளின் வெளிப்பாடாகவே "உண்மை" இருக்கிறது. இந்த "உண்மை", "சத்தியம்" என்ற பொருளை இந்த இடத்தில் கொடுப்பதில்லை. எப்படி நீதியானது தேவன் சம்பந்தப்பட்டதாகவும், தேவனால் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகவும் இருக்கிறதோ அது போலத்தான் உண்மை என்பதும் தேவன் சம்பந்தப்பட்டதாகவும், தேவனால் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகவும் உள்ளது.

பொய்யுரையாத தேவனுடைய பிள்ளைகளிடத்தில், பொய் என்பது அறவே இருக்கக்கூடாது. பொய் தேவனுக்கு அருவருப்பானது (நீதி. 6:16-19). ஆனால், பிசாசோ பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான் (யோவான் 8:44). மனுஷ கொலை பாதகனாயிருக்கிற இந்தப் பிசாசு, தன்னுடைய தேர்ந்த தந்திரத்தினால் கர்த்தருடைய பிள்ளைகளை எப்படியோ தீண்டி விடுகிறான். ஆம், தேவனை விசுவாசித்து (மாற்கு 16:16) தன்னுடைய பாவங்களினிமித்தம் மனந்திரும்பி (அப். 2:38), கடந்த காலப் பாவங்களிலிருந்து விடுதலை பெறத் தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெற்று (அப். 22:16) கர்த்தரால் அவருடைய சபையில் சேர்க்கப்பட்டு (அப். 2:47) மறுபிறப்பின் வாழ்க்கையைத் துவங்கினவர்கள் கூட பொய்யினால் சுலபமாகப் பாதிக்கப்பட்டு விடுகிறார்கள். எபேசு பட்டணத்துக் கிறிஸ்தவர்கள் சிலரிடம், இந்தப் பெலவீனம் இருந்துள்ளதாகவே தெரிகிறது. ஆகவேதான், ஆவியின் கனிகள் பற்றி, 5:9-ல் கூறுவதற்கு முன்பாகவே, 4-ம் அதிகாரத்தில் இப்படியாக எழுதியுள்ளார். "அன்றியும் நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்" (4:25) என்று.

நம்முடைய இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்து மலைப் பிரசங்கத்தில், உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும் என்று போதித்துள்ளார் (மத். 5:37). உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்கள் பெறுவான் (நீதி. 28:20) என்று ஞானி சாலமோனைக் கொண்டு தேவன் சொல்லியிருந்தாலும், நாம் ஒவ்வொருவரும் என்ன சொல்லுகிறோம்? பொய் பேசாமல், உண்மை பேச வேண்டுமென்றுதான் விரும்புகிறேன். ஆனால், சூழ்நிலை என்னைப் பாதித்து விடுகிறது என்று கூறி. சூழ்நிலையின் மீது பழியைப் போடுகிறோம். ஆனால், ஒருவர் உண்மை

பேச விரும்பினால் எந்தச் சூழ்நிலையிலும் உண்மை பேச முடியும் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம் வேதாகமத்தில் உண்டு என்பது நினைவிலிருக்கட்டும்.

இயேசு ஆண்டவரால் சுகமாக்கப்பட்ட "பெரும்பாடுள்ள ஸ்திரீ"யை வேதத்தை வாசிக்கும் நாம் யாவரும் அறிவோம். இவள் பற்றிய காரியம் மாற்கு 5:25-34 வசனப்பகுதியில் இடம் பெற்றுள்ளது. பெண்களுக்கே உரித்தான இவள் பிரச்சினை சாதாரணமானதல்ல. தனக்கு உண்டானவைகளையெல்லாம் செலவழித்தும் சுகம் கிடைக்காதபடியால் கடைசி முயற்சியாக இயேசுவிடம் வந்து வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டு சுகம் பெற்றாள். அச்சம்பவத்தின் போது என்னைத் தொட்டது யார் என்று இயேசு சுற்றிலும் பார்த்தபோது, "அவள் பயந்து நடுங்கி, அவர் முன்பாக வந்து விழுந்து, *உண்மையையெல்லாம்* அவருக்குச் சொல்லியுள்ளாள்". (மாற். 5:31-33). நன்றாக கவனியுங்கள். அவள் உண்மையையெல்லாம் சொன்னாள் என்று வேத வசனம் அழுத்தமாகச் சொல்கிறது. பாதி உண்மையல்ல, முழு உண்மையையும் சொல்லியுள்ளாள்.

பெரும்பாடுள்ள ஸ்திரீயின் சூழலைக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். இயேசு ஆண்டவர் ஒரு ஆண். அவரோடிருந்த சீடர்கள் ஆண்கள். அந்நாட்களில் அவருக்குப் பின்சென்றவர்களில் பெரும்பாலோர் ஆண்களாக இருந்திருக்கவே வாய்ப்புகள் அதிகம். இயேசுவை நெருக்குகின்ற அளவுக்கு திரள் கூட்டம். இவள் பிரச்சினையோ பெண்களுக்கே உரித்தான ஒன்று. இது பற்றி ஓர் அந்நிய ஆணிடம், திரளான ஆண்கள் கூடியிருக்கின்ற இடத்தில் வெளிப்படையாகப் பேசுவது ஒரு பெண்ணுக்கு நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. ஆனாலும், இவள் உண்மையையெல்லாம் சொல்லியுள்ளாள். எதையும் மறைக்கவுமில்லை, மழுப்பவும் இல்லை. இச்சம்பவம், எந்தச் சூழ்நிலையிலும் ஒருவரால் உண்மை பேச முடியும் என்பதை நமக்குச் சொல்லுகிறதா இல்லையா? கண்டிப்பாக ஒருவனால் எவ்வளவு எதிரான சூழலிலும் உண்மை பேச முடியும். ஆகையால், நாம் யாரும் பொய் பேசாமல், உண்மையை மாத்திரம் பேசத் தீர்மானிப்போம்.

ஒரு தேவனுடைய பிள்ளை பொய் பேசுவதை தேவன் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை. அனனியா, சப்பீராள் சம்பவம் இதற்கு ஓர் உதாரணம் (அப். 5:1-10). இச்சம்பவத்தில் அவர்கள் பொய் பேசியிருக்க வேண்டிய அவசியமே இல்லை. ஆனால், பொய் பேசி இந்த ஜீவனையும் இழந்து, நித்திய ஜீவனையும் இழந்து போனார்கள். ஆம், பொய்யர்கள் பரலோகம் போக முடியாது (வெளி. 21:8). அவர்களுக்கு அக்கினியும் கந்தகமும் எரிகிற கடல் தான் காத்துக் கொண்டிருக்கும். இது நமக்கெல்லாம் ஓர் உயிருள்ள எச்சரிப்பாக உள்ளது.

ஆகையால், அருமையானவர்களே, எபேசியர் 5:9-ல் சொல்லப்பட்டிருக்கும் சகல நற்குணம், நீதி, உண்மை என்னும் ஆவியின் கனிகளை நாம் ஒவ்வொருவரும் நம்முடைய பக்தி வாழ்க்கையில் தந்து, தேவ எதிர்பார்ப்பை நம் கிறிஸ்தவ வாழ்க்கையில் எட்டுவோம். இதன் மூலம் பரலோக பாக்கியத்துக்கான நம்முடைய வாய்ப்பைப் பிரகாசமாக்கிக் கொள்வோம்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிக்கட்டும். ஆமென்!

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

# பதினான்காம் வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## "திருமறை தியானம்" நேயர்கள் & "திருமறை ஆசான்" வாசகர்கள் கருத்தரங்கம்

**இடம் :**

**YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)**

**நாள் : மே மாதம் 2,3,4, - 2011 (திங், செவ், புதன்)**

*சிறப்பம்சங்கள்*

- கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
- தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.
- ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.
- பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்.
- கோடை வாசஸ்தலம் – சமச்சீரான தட்ப வெப்பம்.
- வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்.
- குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.
- பெண்களுக்கு தனி இடவசதி.
- சிறுபிள்ளைகளை உற்சாகப்படுத்த பரிசுகளுடன் கூடிய போட்டிகள்.

**உணவும், தங்குமிடமும் இலவசம்**

**பதிவுக் கட்டணம்**

**பெரியவர்கள் ரூ. 125 /- சிறியவர்கள் ரூ. 75 /-**

## கிறிஸ்துவின் சபை

288, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.**

# ஏன் சுவிசேஷம் இரட்சிப்பதற்கு தேவபெலனாயிருக்கிறது?

***J.C. Choate***

ஏன் ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டும்? ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டும் என்று சொல்லும் போது, அவர் இழந்து போன நிலையில் இருக்கிறார், ஆபத்தில் இருக்கிறார், அப்படிப் பட்டவர் காப்பாற்றப்பட வேண்டும். ஏனெனில், மனிதன் தன்னைத் தானே மீட்டுக் கொள்ளும் நிலையில் இல்லை. இழந்து போன நிலையில் இருப்பதை நாம் சிலருக்குச் சுட்டிக் காட்டும் போது அவர்கள் கோபப்படுகிறார்கள். ஆனால், இப்படிப்பட்ட மக்கள் தான் எல்லாரைக் காட்டிலும் மிக மோசமான நிலையில் இருக்கிறார்கள். இழந்துபோன நிலையில் இருப்பதே மோசமான நிலை தான். அதிலும், எப்படி ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதையும், இழந்து போனதை அறியாமலும், ஒத்துக் கொள்ளாமலும் இருந்தால், அப்படிப்பட்டவர்களுக்கு எப்படி உதவ முடியும்? அநேகர் இழந்துபோன நிலையில் இருந்து கொண்டு தாங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதாக நினைக்கிறார்கள். இவர்களுக்கு இரட்சிப்புக்கான உதவி தேவை. ஆனால், இப்படிப் பட்டவர்களைச் சென்றடைவது கடினம்.

மறுபடியும், நாம் நமது கேள்விக்குத் திரும்புவோம். ஏன் மனிதன் இழந்து போன நிலையில் இருக்கிறான்? மனிதன் பாவத்தில் இருக்கிறபடியால் இழந்துபோன நிலையில் இருக்கிறான். ஆகையால், அவன் பாவியாயிருக்கிறான். நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம் (I யோவான் 3:4). அநீதியெல்லாம் பாவம் (Iயோவான் 5:17). எனவே, ஒருவர் தேவனுடைய கட்டளையை மீறும் போதோ, தவறு செய்யும் போதோ பாவம் செய்கிறார். யோவான் இப்படியாகச் சொல்கிறார். "பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில், பிசாசானவன் ஆதி முதல் பாவஞ் செய்கிறான்" (I யோவான் 3:8). "எல்லாரும் பாவஞ் செய்து, தேவ மகிமையற்றவர்களாகி என்றும், நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்றும் பவுல் சொல்கிறார் (ரோமர் 3:23; ரோமர் 3:10). நிச்சயமாகவே, இங்கே பவுல் தங்கள் செயல்களுக்கு கணக்குக் கொடுக்கக்கூடிய நிலையில் உள்ளவர்கள் பற்றித் தான் பேசுகிறார். யாக்கோபு இப்படியாகச் சொல்கிறார். "ஆதலால், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற் போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" என்று (யாக்கோபு 4:17).

மனிதன் பாவத்தில் இருந்துகொண்டு இழந்துபோன நிலையில் இருந்தால், அந்த பாவத்திலிருந்து விடுபட மனிதனால் என்ன செய்ய முடியும்? நிச்சயமாகவே, மனிதனால் தன்னைத்

தானே இரட்சித்துக் கொள்ள முடியாது. பாவத்திலிருக்கும் வேறு யாரும் அவனை இரட்சிக்க முடியாது. ஒருவனுடைய நற்கிரியைகள் மட்டும் அவனை இரட்சிக்காது. அப்படியென்றால், மனிதனுக்கு நம்பிக்கையே இல்லையா? இல்லையில்லை, நம்பிக்கை இருக்கிறது. நம்மில் அன்பு கூர்ந்து, நாம் தப்பித்துக் கொள்ளும் போக்கை உண்டாக்க ஒருவர் விரும்பினபடியால் நிச்சயமாகவே நம்பிக்கை இருக்கிறது.

நூற்றுக்கணக்கான ஆண்டுகள், தேவன், மனிதன் தன் பாவங்களிலிருந்து நிவர்த்தியாகும் பொருட்டு மிருக பலிகளைச் செலுத்தும்படி கட்டளையிட்டார். இந்த பலிகளால் நிரந்தரமாக மனிதனுடைய பாவங்களை எடுத்துப் போட முடியவில்லை. ஏனென்றால், மனிதனுடைய பாவங்கள் வருடந்தோறும் நினைவு கூரப்பட்டது (எபிரெயர். 10:1-4). எனவே, தேவன் இந்த உலகத்தின் பாவத்திற்காக ஒரே தரம் மரிக்கும்படி தம்முடைய ஒரே பேறான குமாரனை சிலுவையில் பலியாகும்படி அனுப்பிக் கொடுத்தார் (யோவான் 3:16; ரோமர் 5:8). எபிரெய ஆசிரியர் கிறிஸ்துவைப் பற்றி இப்படியாகச் சொல்கிறார், “இவரோ பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து, இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் காத்துக் கொண்டிருக்கிறார். ஏனெனில், பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்” (எபிரெயர். 10:12-14).

மனிதனுடைய பாவங்களுக்காகக் கிறிஸ்து சிலுவையில் மரித்த போது, குறிப்பாக, அவர் தேவனுடைய குமாரன், தேவனிடத்திலிருந்து வந்தவர், மானிட இரட்சகர் என்பதை நிச்சயப்படுத்த, அவருடைய அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, மானிடர் எல்லோருக்கும் அது நற்செய்தியாகி விட்டது. மனிதன் இரட்சிக்கப்பட முடியும், நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதால் இது நற்செய்தியாயிருக்கிறது. இது தான் சுவிசேஷம் எனப்படுகிறது. அதாவது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் தான் நற்செய்தி எனப் பொருள்படும் சுவிசேஷமாயிருக்கிறது. இது இன்றும் நற்செய்தியாகத்தான் இருக்கிறது. மனிதன் இதை விசுவாசித்து தன்னுடைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும்படி இந்த நற்செய்தி அவனுக்கு தேவனால் அளிக்கப்பட்டிருக்கிறது.

பவுல் இப்படியாக எழுதினார், “ஆதலால், கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு

அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே" (ரோமர் 10:13-15). மறுபடியும் பவுல் சொல்லும்போது, " இப்படியிருக்க சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞான போஜனத்தைப் புசித்தார்கள், எல்லாரும் ஒரே ஞான பானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடே கூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே" (I கொரிந்தியர் 10:1-4).

ஆனால், சத்தியம் எப்படி ஒருவரை இரட்சிக்கும்? பிரசங்கம் எப்படி அவர்களை இரட்சிக்கும்? அல்லது அவைகளை விசுவாசிப்பதன் மூலமாக எப்படி அவைகள் ஒருவனை இரட்சிக்கும்? இதைப் புரிந்து கொள்ள வசனங்கள் என்ன சொல்கிறது என்று பார்ப்போம். கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப்பிறகு, அவர் பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்திற்கு திரும்புவதற்கு சற்று நேரத்திற்கு முன்பு அவர் அப்போஸ்தலர்களைப் பார்த்து இப்படியாகச் சொன்னார். "பின்பு, அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய்; சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" என்று (மாற்கு 16:15,16). மத்தேயு நற்செய்தியாளர் நம்முடைய கர்த்தரின் வார்த்தைகளை இப்படியாகப் பதிவு செய்திருக்கிறார். "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்" (மத்தேயு 28:19,20). லூக்கா நற்செய்தியாளர் இப்படியாக விவரிக்கிறார். எழுதியிருக்கிறபடி, "கிறிஸ்து பாடுபடவும் மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத் தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியதாயிருந்தது" (லூக்கா 24:46,47).

மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய புத்தகங்களில் கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களைப் பார்த்து உலகெங்கும் போய், ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொரு தனி நபருக்கும், சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும் என்று சொன்னார். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் போது, கர்த்தருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய நற்செய்தியை அவர்கள் அறிவிக்க வேண்டியதாயிருந்தது. அப்படியானால், வேறு

எதுவும் பிரசங்கிக்கப்படவில்லையா? கர்த்தர் அப்போஸ்தலர்களிடம் வேறு எதையும் பிரசங்கிக்க கட்டளையிடவில்லையா? ஆம், அவர்கள் விசுவாசத்தையும், ஞானஸ்நானத்தையும் பற்றி பேச வேண்டியதாயிருந்தது. அதுமட்டுமல்ல, அவர்கள் விசுவாசிகளுக்கு பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்க வேண்டியதாயிருந்தது. ஆனால், இதற்கும் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்கும் உள்ள சம்மந்தம் என்ன? நாம் குறிப்பாக அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை படிக்கும்போது அதில் சொல்லப்பட்டுள்ள எல்லா மனமாற்ற சம்பவங்களிலும் கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கம் அல்லது சுவிசேஷம் இருந்தது. ஜனங்கள் சுவிசேஷத்தைக் கேட்டு, அதைப் புரிந்திருக்கிறார்கள். அடுத்ததாக, அதை விசுவாசித்து, தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, கடைசியாக அவர்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள்.

மறுபடியும், இவைகளெல்லாவற்றிற்கும் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கும் என்ன சம்மந்தம் இருந்தது? கிறிஸ்துவானவர் மனிதன் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்காக மாத்திரம் மரிக்காமல், அந்த இரட்சிப்புக்கு முன்பாக அவர் சில நிபந்தனைகளையும் வைத்திருக்கிறார். கிறிஸ்து தேவனுடைய குமாரனாயிருப்பதாலும், மனிதன் இரட்சிக்கப்படும்படிக்கு சிலுவையில் மரித்தவராயிருப்பதினாலும், வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரத்தையும் உடையவராக இருப்பதாலும் சில குறிப்பிட்ட காரியங்களை மனிதன் செய்யும்படி கேட்பதற்கு அவருக்கு எல்லா உரிமையும் இருக்கிறது. மனிதன் இரட்சிக்கப்பட விரும்பினால், அவன் விசுவாசிக்க வேண்டும் என்று அவர் சொல்கிறார். அவன், தேவனையும் விசுவாசிக்க வேண்டும், கிறிஸ்துவையும் விசுவாசிக்க வேண்டும். அடுத்து, தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் அல்லது தவறான அல்லது எல்லா கெட்ட நடக்கைகளிலிருந்தும் திருந்த வேண்டும். அடுத்ததாக, அவன் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வேண்டும். கடைசியாக, பாவங்கள் கழுவப்படும்படி அவன் ஞானஸ்நானம் பெற வேண்டும். இவைகளைச் செய்தால், அவன் இயேசுவின் மீது வைத்திருக்கும் விசுவாசத்தையும், இரட்சிக்கபட வேண்டும் என்கிற தன் விருப்பத்தையும் இயேசுவிடம் நிரூபிப்பதாக இருக்கும். சுவிசேஷத்தில் வல்லமை இருப்பதாக பவுல் சொன்னார். அதாவது, கர்த்தர், மரணம், அடக்கம், உயிர்த் தெழுதல் இவைகளின் மூலம் கிரியை செய்கிறார். “ கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது ” (ரோமர் 1:16,17).

ரோமர் ஆறாம் அதிகாரத்தில் பவுல், கிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந் ததைக் காட்டுகிறார். மேலும், அவர், ஒருவர் கர்த்தருக்கு கீழ்ப்படி யும் போது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை தன்னுடைய செயல்களின் மூலம் காட்டுகிறார். வேறுவிதமாகச் சொன்னால், ஒருவர் கிறிஸ்துவை விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந் திரும்பி, பாவத்துக்கு மரிக்கும்போது, கிறிஸ்துவின் மரணத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார். அவர் கர்த்தரோடு அடக்கம் பண்ணப்படுவதற்கு தண்ணீர் ஞானஸ்நானத்தில் மூழ்கும்போது கர்த்தருடைய மரணத்தின் தன்மைகளோடு தொடர்பை ஏற்படுத் திக்கொள்கிறார். இது கிறிஸ்துவின் அடக்கத்தை எடுத்துக்காட்டு கிறது. கடைசியாக, ஒருவர் புதிய மனிதனாக தண்ணீரிலிருந்து வெளியே வரும்போது, தன்னுடைய பழைய பாவங்கள் மன்னிக் கப்பட்ட நிலையில் வெளியே வருகிறார், இது கர்த்தருடைய உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது. பவுலின் இந்த வார்த்தைகளை கவனியுங்கள். "இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ் நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினா லே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால், அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்க ளானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டி ருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 6:3-6). தொடர்ந்த பவுலடியார் இப்படியாகச் சொல்கிறார், "முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப் பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந் ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம், பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்கள்" (ரோமர் 6:17,18). இங்கே உபதேசம் என்பது கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலாயிருக்கிறது. இங்கே இந்த ஜனங்கள் எந்த சட்டத்திற்குக் கீழ்ப்படிந்தார்களோ அது உபதேச மாயிருக்கிறது. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, இவர்கள் தங்கள் பாவங்களுக்காக மரித்து, தண்ணீர் ஞானஸ்நானத்தினாலே அடக்கம் பண்ணப்பட்டு, தண்ணீரிலிருந்து வெளியே வந்து, அதாவது, புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கும், புதிய சிருஷ்டியாயிருக்கும்படிக்கும், நித்திய ஜீவனுக் கான நம்பிக்கையோடு கிறிஸ்துவைப் பின்பற்றும்படிக்கும்,

அவர்கள் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை தங்கள் செயலின் மூலம் காட்டியிருக்கிறார்கள்.

II தெசலோனிக்கேயர் 1:7-9 வசனங்களில் பவுலடியார் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தர் திரும்ப வருவார் என்று சொல்கிறார். சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்கள் இழந்து போவார்கள் என்று பேதுருவும் சொல்கிறார் (I பேதுரு 4:17). எனவே, சுவிசேஷம் என்பது ஒருவர் விசுவாசிக்கின்ற ஒன்றாக மட்டுமல்லாமல் ஒருவர் கீழ்ப்படிய வேண்டிய ஒன்றாகவும் இருக்கிறது. ஒருவர் அதை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படியும் போது கர்த்தர் அந்த நபரை தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்கிறார்.

சுவிசேஷம் வேத வாக்கியங்களில் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. "சுவிசேஷத்தை நான் பிரசங்கியாயிருந்தால், எனக்கு ஐயோ" என்று பவுல் சொன்னார் (I கொரி 9:16). வேறொரு சுவிசேஷத்தை தான் பிரசங்கித்தால் தான் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் என்றும் அவர் சொல்கிறார் (கலாத்தியர் 1:6-9). இதையே வேறுவிதமாகச் சொன்னால், ஒன்றான மெய் சுவிசேஷத்தை அவர் ஏற்கனவே பிரசங்கித்துவிட்டார். வேறொரு சுவிசேஷம் இல்லாதபடியால், வேறொரு சுவிசேஷத்தைத் தான் பிரசங்கித்தால் தான் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் என்றும் அவர் சொல்கிறார் (கலாத்தியர் 1:6-9). ஏனென்றால், உண்மையான சுவிசேஷம் ஏற்கனவே பிரசங்கிக்கப்பட்டுவிட்டது.

என் நண்பர்களே, கிறிஸ்துவின் நற்செய்திக்கு நீங்கள் கீழ்ப்படிந்துவிட்டார்களா? அதை நீங்கள் விசுவாசிக்கிறீகளா? அதற்குக் கீழ்ப்படிவீர்களா? நீங்கள் அப்படிச் செய்ய நான் ஜெபிக்கிறேன். உங்களை இரட்சிக்க கர்த்தருக்கு உகந்த வேறு வழி இல்லை. ✯

- **கவலை ஜெபத்தில் வைப்பதற்கு சிறியதாக இருந்தால், அது சுமப்பதற்கும் சிறிதாகத் தான் இருக்கும்.**
- **ஒரு நிமிடம் வாயை மூடுவது ஒரு மணி நேர விளக்கத்திற்கு சமம்.**
- **நீங்கள் எதற்காக வாழ்கிறீர்களோ, அது அதற்காக மரிப்பதற்கும் ஏற்றது.**

பெண்கள் பகுதி

# ஆத்தும சோர்வு

**ரேச்சல் இராஜநாயகம்**

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு சகோதரிகளுக்கு மீட்பர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இம்மாதமும் கர்த்தருடைய வார்த்தையை படிப்பதற்கு தேவன் செய்த கிருபைக்காய் அவருக்கு நன்றி செலுத்துவோம்.

இன்றைக்கு, உண்மையாலுமே பரலோகம் செல்ல வேண்டும் என்று நினைக்கும் கிறிஸ்தவர்கள் மிகவும் சிலராகத் தான் இருக்கிறார்கள். கிறிஸ்தவம் என்பது இம்மைக்குரிய ஆசீர்வாதங்களுக்கு சொந்தமானது என்பது பெரும்பாலானவரின் கருத்து. ஆசீர்வாதம் இருக்கும், ஆனால் பாடுகள், சவால்கள், எதிர்ப்புகள், போன்றவைகளும் இல்லாமல் இருக்காது. இவை களைக் கண்டு நாம் சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை. ஏதோ ஒரு மனிதனுடைய அறிவினால் ஏற்பட்ட அனுபவத்திலோ, அல்லது தத்துவ மேதைகளின் மூளையின் கருத்தோ இது அல்ல. சர்வ வல்ல தேவன் பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தி யுள்ள உண்மையுள்ள வார்த்தைகள்.

ஆதியாகமம் தொடங்கி நாம் பார்க்கும் பொழுது தேவனின் அன்பு, மனுக்குலத்தின் மீது எப்படி இருந்தது என்பதை நாம் கண்டு கொள்ள முடியும். தேவனுடைய அழைப்பை ஏற்று தன் ஊரையும், வீட்டையும், தேசத்தையும் விட்டு வந்த ஆபிரகாமை தேவன் ஆசீர்வதித்தார். ஆனால், தான் பெற்றுக் கொள்ள வேண்டியவைகளை மிகவும் தாமதமாக, வருடக்கணக்காக காத்திருந்து பெற்றுக்கொண்டான். அப்படிப் பெற்றுக்கொண்ட தன் ஒரே மைந்தன் ஈசாக்கை பலியிடச் சொல்லி, அதற்கும் கீழ்ப் படிந்து பின்பு திரும்பப் பெற்றுக்கொண்டார். எனவே விசுவாசி களின் தகப்பனாக இன்றும் பேசப்படுகிறார்.

புதிய ஏற்பாட்டில் பார்த்தால் மிகவும் பக்தி வைராக்கிய மாயிருந்த அப். பவுல் சபைகளை ஸ்தாபித்து, நிருபங்களை எழுதி சுவிசேஷப் பயணங்களை மேற்கொண்டு இப்படி பல வேலைகளை கிறிஸ்துவுக்காக செய்தார். ஆனால் அவர் வாழ்க்கையிலும் பெலவீனம், குறைவு, நிந்தைகள் இருக்கவே செய்தது. என் கிருபை உனக்கு போதும் உன் பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும் என்று ஒரே ஆவியானவர் பவுலுக்குச் சொல்லிவிட்டார். இந்த அப்போஸ்தலன் பவுல் புதிய ஏற்பாட்டில் தனி நிருபங்களையும், பொதுவான நிருபங்களையும் எழுதி யுள்ளார். எபிரெயர் புஸ்தகம் அப்போஸ்தலன் பவுலால் எழுதப் பட்டது என்று நம்பப்படுகிறது. இப்புத்தகம் எபிரெய கிறிஸ்தவர் களுக்கு எழுதப்பட்டது. அவ்வப்போது பழைய பிரமாணங்களை நினைத்து வாழ்ந்து கொண்டிருந்த புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர் களை ஊக்கப்படுத்தும் வகையில், பரிசுத்த ஆவியானவர் பவுலைக் கொண்டு இந்நிருபத்தை எழுதிக் கொடுத்துள்ளார்.

எபிரெயர் 11-ம் அதிகாரம் முழுவதும் விசுவாசி களின் பட்டியலை நாம் காண முடியும். ஆபேல் துவங்கி சிறிய தீர்க்கதரிசனம் புஸ்தகம் முடிய உள்ள விசுவாசிகள் தாங்கள் நம்பின தேவனுக்காக எப்படி வைராக்கியமாயிருந்தார்கள் என்று அவ்வதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம்.

அவ்வளவு விசுவாச வீரர்களையும் பட்டியலிட்டு விட்டு 12ம் அதிகாரத்தின் முதல் வசனத்திலேயே மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மை சூழ்ந்து கொண்டிருக்க என்று எழுத ஆரம்பித்து மூன்றாம் வசனத்தில் **ஆத்துமாக்களில் சோர்ந்து போக வேண்டாம்** என்று எழுதுகிறார்.

அப்படி ஆத்தும சோர்வை களைந்து, ஆத்தம இளைப்பாறு தலைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால் நாம் சில காரியங்களைச் செய்ய வேண்டும். சில காரியத்தை **தள்ள வேண்டும், சிலவற்றை சேர்க்க வேண்டும்.**

***முதலாவது,*** பாரமான யாவற்றையும் தள்ள வேண்டும். சுயம் என்ற பாரம். எப்போதும் தங்களைப் பற்றியே சிந்தித்து கவலைப்படுவது. தங்களுடைய எதிர்காலம், தங்களுடைய பிள்ளைகளைப் பற்றிய பாரம், சொந்தம், உறவு என்ற பாரம், சுகம் என்ற பாரம், நாளைய தினத்தைப் பற்றிய பாரம், இப்படி நாமே பல பாரங்களை ஏற்படுத்திக் கொண்டு சோர்ந்து போய்க் கொண்டிருக்கிறோம். எனவே முதலாவது இதைத் தள்ளி விட வேண்டும்.

***இரண்டாவது,*** நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட வேண்டும். இதுதான் இன்றைக்கு பெரும்பாலானவர்களால் செய்ய முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நெருங்கி நிற்கிற பாவம் என்கிற போது, அடிக்கடி ஒருவர் செய்து கொண்டிருக்கும் பாவம். அப்பாவத்தை விட்டுவிட சமயம் வாய்த்தாலும், விடாது அதையே திரும்ப திரும்ப நேசித்து செல்வது. நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட வேண்டும்.

இப்படி, இரண்டையும் செய்து விட்டு விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கிப் பார்க்க வேண்டும். பின்பு நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடவேண்டும். ஏன் இயேசுவை நோக்கிப் பார்க்க வேண்டும்? அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். என்ன சந்தோஷம் அவருக்கு முன் வைக்கப்பட்டிருந்தது. தான் இரத்தம் சிந்துவதால் மனுக்குலத்துக்கு இரட்சிப்பு என்ற சந்தோஷத்தின் பொருட்டாக சிலுவையை சகித்தார். இந்த இயேசுவை நமக்கு முன் நிறுத்தி, நோக்கி நமக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக் கற்றுக்கொள்வோம்.

இன்னுமாக நாம் நம் பாடுகளினிமித்தம் ஆத்தும சோர்வடைந்து, பல கேள்விகளை நமக்கு நாமே கேட்டு, பொறுமையை இழந்து, நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் வாடாத ஜீவ கிரீடத்தை பெற்றுக்கொள்வோம் என்ற எண்ணத்தை ஒழித்து விட்டு, சோர்வடைந்து, நம்முடைய நியமனத்தை பாதியில் முடித்துக் கொள்ள ஒப்புக்கொடுத்து விடுகிறோம்.

ஆனால், வசனம் நமக்கு என்ன சொல்கிறது? சோர் வில்லாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்? தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங் களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள் என்று நமக்கு ஆசோனை கூறுகிறது. ஆம், இயேசு சந்தித்த பாடுகள் விபரீதமானது. நிந்தை, அவமானம், அடி, துரோகம், சிலுவை சுமந்த விதம், மரித்த விதம், அவர் பாடுகளை சகித்த விதம் இப்படி எல்லாமே விபரீதமானது. இந்த விபரீதமான இயேசுவை நினைத்துக் கொள்ளும் போது நம் ஆத்தும சோர்வு நீங்கும் என்று வசனம் சொல்லுகிறது. இந்த உலகத்தை சதம் என்று எண்ணாமல் மறுமையை நம் கண்முன் வைக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

இதை வாசிக்கும் அன்பு சகோதரிகளே! பற்பல காரணங் களில் ஆத்தும॥ சோர்ந்து இருக்குமானால் நிச்சயமாக இந்த வார்த்தைகள் நம்மை இளைப்படையச் செய்யும். இயேசு தான் நமக்கும் எல்லாவற்றிலும் எல்லாம் வேறு எந்த மனிதனையும், கொள்ளைகளையும், உபதேசங்களையும் நம்பி ஏமாந்து போக வேண்டாம். இயேசு கிறிஸ்து ரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த ஒன்றான மெய் சபையாகிய புதிய ஏற்பாட்டு சபை, கிறிஸ்துவின் சபையில் நாம் இருந்து புதிய ஏற்பாட்டு உபதேசம், அதாவது ஆதி அப்போஸ்தலர்கள் உபதேசித்த உபதேசத்தின்படி வாழப் பழகிக் கொள்ளும்போது நிச்சயமாக சோர்விலும் ஓர் இளைப் பாறுதல் கிடைக்கும்.

வசனத்தின்படி வாழும் போதுதான் நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓட முடியும். மற்றவர்களோடு நம்மை ஒப்பிட்டுப் பார்த்து கவலைப்பட வேண்டிய அவசியமில் லை. இயேசு தனிமையில் எல்லாவற்றையும் சகித்தார். அவரைத் தான் நாம் நினைத்துக் கொள்ள வேண்டும். நமக்கு முன் சந்தோஷம் வைக்கப்பட்டிருக்கிறது. எனவே சோர்வடையாமல் ஓட்டத்தை தொடருவோம். பரலோகத்தின் தேவன் அதற்கு உதவி செய்வாராக ஆமென்!! ✯

## நாளும், நடப்பும்

1. மத்திய பட்ஜெட் 2011-12 விவசாயம், ஊரக வளர்ச்சிக்கான பட்ஜெட்.
2. உற்பத்தி வரி, சுங்கவரி பட்ஜெட்டில் குறைக்கப்படாததால் பெட்ரோல், டீசல் விலை உயர வாய்ப்பு இருக்கிறது.
3. தமிழகத்தில் ஏப்ரல் 13-ல் சட்டமன்றத் தேர்தல்.
4. லிபியா அதிபர் கடாஃபிக்கு எதிராக அமெரிக்கா நாடாளுமன்றத்தில் தீர்மானம்.
5. ஜப்பானைத் தாக்கிய சுனாமி வரலாறு காணாத சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.
6. ஜப்பான் சுனாமி அப்பிராந்திய நாடுகளிலும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.
7. உலகக் கோப்பை கிரிக்கெட் சில அதிர்ச்சிகளுடன் விறுவிறுப்பான கட்டத்தை நெருங்கி வருகிறது.

வாலிபர் பகுதி

# காலேப் வேறே ஆவியை உடையவன்

**N. பர்னபாஸ்**

சபைக்காக தன் ஜீவனை ஈந்த கிறிஸ்து இயேசுவின் நாமத்தினாலே வாலிபர்களாகிய உங்களை வாழ்த்துகிறேன். நம்முடைய பரிசுத்த வேதாகமத்தில் உலகத் தோற்ற முதற்கொண்டு தேவன் தம்முடைய சித்தத்தை யார் செய்கிறார்களோ அவர்களை தெரிந்து கொண்டு அவர்களுக்கு வேண்டிய வாக்குத்தத்தங்களையும் ஆசீர்வாதங்களையும் கொடுத்திருப்பதை நாம் அநேக வேளைகளில் வாசித்து இருக்க முடியும்.

அப்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவனை அநேக வேளைகளில் அவர் "என் தாசன்" என்று பெருமையாக அழைத்திருக்கிறார் அப்படி வேதாகமங்களில் அழைக்கப்பட்டவர்களை நாம் விரல் விட்டு எண்ணி விடலாம். அந்த ஒரு சிலரில் ஒருவனைக் குறித்து தான் நாம் கற்றுக் கொள்ளப் போகிறோம். அவன் வேறு யாருமல்ல நமக்கு மிகவும் பரிச்சயமான "காலேப்" தான். இவனைக் குறித்து தேவன் "என் தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவன்" (எண் 14:24) என்று கூறி இவனைக் குறித்தும் சாட்சியும் கொடுத்தார். இதைக் குறித்து நாம் ஆராய்ச்சி செய்து கற்றுக்கொள்வோம்.

எகிப்திலிருந்து மோசேயின் தலைமையில் விடுதலையாகி புறப்பட்டுப் போன திரளான இஸ்ரவேல் ஜனங்கள் செங்கடலை கடந்து, பல இன்னல்களுக்கு மத்தியில் பாரான் வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள் (எண். 12:16) இந்த வனாந்தரத்திலிருந்து மோசே தேவனுடைய கட்டளையின்படி பன்னிரெண்டு வேவுகாரர்களை கானான் தேசத்திற்கு வேவு பார்க்க அனுப்பி வைத்தான். அவர்களில் இரண்டு பேர் காலேப், யோசுவா (எண் 13:6,8) என்பவர்கள், இந்த பன்னிரெண்டு பேரும் சேர்ந்து கானானனை வேவு பார்த்து விட்டு சுமார் 40 நாட்களுக்கு பின்பு கானான் தேசத்தின் கனிகளை அறுத்துக் கொண்டு, தங்கள் பாளயத்திற்கு திரும்பி வந்தார்கள் (எண் 13:25,26). அப்படி வந்தவர்களில் காலேப், யோசுவாவும் தவிர மற்ற பத்து பேர்கள் கானான் தேசத்தின் ஜனங்களை குறித்து துர்ச் செய்தி பரப்ப, ஜனங்கள் அதைக் கேட்டு கைகால் நடுக்கம் பிடித்தவர்களாக தேவனை விசுவாசிக்காமல் ஒரு தலைவனை ஏற்படுத்தி கொண்டு எகிப்துகே திரும்பி போய் விடுவோம் என்று தங்கள் இருதயங்களில் எகிப்துக்கு திரும்பினார்கள் (எண் 14:4).

இதனால் கோபம் அடைந்த தேவன் "அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தை காணமாட்டார்கள் எனக்கு கோபம் உண்டாக்கினவர்களில் ஒருவரும் அதைக்

காணமாட்டார்கள்" (எண் 14:23) என்றார். ஆனால், காலேப்பை குறித்து தேவன் என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும் உத்தமமாய் என்னைப் பின்பற்றினபடியினாலும் அவன் போய் வந்த தேசத்தி லே அவனைச் சேரப் பண்ணுவேன் (எண் 14:24) என்று வாக்கு ரைத்தார். ஏனென்றால், "காலேப் வேறே ஆவியை உடையவன்" என்று தேவனே சாட்சி கொடுத்தார், அது என்னவென்று இக்கட்டுரையின் மூலம் கற்றுக்கொள்வோம்.

## I. காலேப் விசுவாசமென்னும் ஆவியை உடையவன் :-

கானானுக்குள் போய் வந்த வேவுக்காரர்கள் பத்து பேரும் நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது, அவர்கள் நம்மைப் பார்க்கிலும் பலவான்கள் நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்து வந்த அந்த தேசம் தன் குடிகளை பட்சிக்கிற தேசம் நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள், அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம், நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப் போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கு அப்படியே இருந்தோம் (எண். 13:31-33) என்று பீதியோடு சொல்ல, அப்பொழுது காலேப் நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக் கொள்வோம், நாம் அதை எளிதாக ஜெயித்துக் கொள்ளலாம் (எண் 13:30) என்று விசுவாசத்தோடு கூறினான்.

வாலிபர்களே காலேப்பின் வார்த்தையை பாருங்கள், எவ்வளவு விசுவாசம் பாருங்கள் "உடனே ஜெயித்து கொள்ள லாம்" என்றான், வேவு பார்க்க போன பத்து பேரும் தேசத்தையும் ஜனங்களையும் பார்த்தார்கள் ஆனால் காலேப், தேசத்தையும் தன் தேவனையும் மாத்திரமே பார்த்தான், அதனால் தான் அவனுக்கு தேவன் மீது இவ்வளவு அளவு கடந்த விசுவாசத்தை வைக்க முடிந்தது. வாலிபர்களே உங்களுடைய வாழ்க்கையில் பிரச்சனை களும், போராட்டங்களும் வரும்போது நீங்கள் உங்களைச் சுற்றிப் பார்க்காமல், உங்கள் தேவனை மாத்திரமே பாருங்கள், அப்பொழுது தான் விசுவாசத்தில் நீங்கள் வளர்ந்து "அவருடைய தாசனாக" மாற முடியும். இந்த காலேப் விசுவாசத்தில் வேறே ஆவியையுடையவனாக இருந்தான்.

## II காலேப் பொறுமை என்னும் ஆவியை உடையவன்

இஸ்ரவேல் ஜனங்களுடைய அவிசுவாசத்தினாலே கோபம் அடைந்த தேவன் உங்கள் பிரேதங்களே இந்த வனாந்தரத்திலே விழும், அவைகள் வனாந்தரத்திலே விழுந்து தீரு மட்டும் உங்கள் பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே திரிந்து நீங்கள் சோரம் போன பாதகத்தைச் சுமப்பார்கள். நீங்கள் தேசத்தைச் சுற்றிப் பார்த்த நாற்பது நாள் இலக்கத்தின்படியே ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களை சுமந்து என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள் (எண். 14:32:34) என்றார்.

அருமையான வாலிப உள்ளங்களே, இதை கவனியுங்கள். காலேப்புக்கு கானானுக்குள் பிரவேசிக்கும் விசுவாசம் இருந்தது, ஆனாலும், ஜனங்களின் அவிசுவாசத்தினாலே அவர்களோடே சேர்ந்து தானும் அந்த தண்டனைக்கு உட்பட்டு வனாந்தரத்திலே அலைந்து திரிந்தான். ஒரு வருடம் இரண்டு வருடம் அல்ல நாற்பது வருடங்கள் அலைந்தான். எப்படியாவது தேவன் அந்த தேசத்தை நமக்குத் தருவார் என்ற விசவாசத்தோடு நீடிய பொறுமையோடே காத்திருந்தான்.

ஆனால், இன்று வாலிபர்களாகிய நமக்கு பொறுமை என்பதே இல்லாமல் போய்விட்டது, எதற்கெடுத்தாலும் நாம் அவசரப்படுகிறோம். தேவனிடத்தில் ஜெபித்து உடனே பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறோம். பதில் வராத பட்சத்தில் தேவனிடத்தில் கோபப்படுகிறோம். இது தவறான சிந்தனையாகும் நாம் பொறுமையோடே காத்திருந்து பெற்றுக் கொள்ள வேண்டும், காலேப் பொறுமையில் வேறே ஆவியை உடையவனாக இருந்தான்.

**III காலேப் தைரியம் என்னும் ஆவியை உடையவன்**

யோசுவாவின் தலைமையில் இஸ்ரவேலர்கள் யோர்தானைக் கடந்து வெற்றிகரமாக பல யுத்தங்களை செய்து தேசத்தை பங்கிட்டபோது காலேப் யோசுவாவை நோக்கி ஏனாக்கியரின் மலை நாட்டை எனக்குத் தாரும் (யோசு 14:12) என்று கேட்டான். இந்த ஏனாக்கியரை குறித்து தான் மோசேயின் கீழ் இருந்த ஜனங்கள் நடுக்கத்தோடு சொல்லி புலம்பினார்கள் (எண் 13:35) அந்த ஏனாக்கியரின் மலை நாட்டைதான் காலேப் யோசுவாவிடம் கேட்டான். அப்படி கேட்ட போது காலேபுக்கு வயது என்ன தெரியுமா? 85, இந்த வயதில் கர்த்தர் சொன்னபடி "அவர்களைத் துரத்தி விடுவேன்" (யோசு 14:12) என்று தைரியமாகச் சொன்னான்.

அவனுடைய வாழ்க்கையில் எத்தனையோ ஏமாற்றங்களும், பிரச்சனைகளும் ஏற்பட்டாலும் அதைக்கண்டு மனம் சோர்ந்து போகாதபடிக்கு தைரியமாய் வாழ்ந்தான். எனக்கு வயதாகி விட்டதே, ஏதாவது பிரச்சனையில்லாத இடம் தனக்கு சுதந்திரமாக கிடைத்தால் போதும் என்று நினைக்காமல், ஏனாக்கியரின் மலை நாட்டை கேட்டு பெற்று ஏனாக்கியரை துரத்தி அடித்து அதை சுதந்திரமாக்கிக் கொண்டான். காலேப் தைரியத்தில் வேறே ஆவியை உடையவனாக இருந்தான்.

வாலிபர்களே, நம்முடைய தைரியம் எப்படி இருக்கிறது. சபையின் முன்பதாக ஜெபத்திற்கோ, வேத வாசிப்புக்கோ ஊழியர் அழைக்கும் போது தைரியம் இழந்தவர்களாய் சர்வ நாடியும் ஒடுங்கி போய் நிற்கிறோமே. நாம் இனிமேலாவது கர்த்தர் எனக்குள் இருக்கிறார் என்ற தைரியத்தோடு தோல்விகளைக் கண்டு துவளாமல் கர்த்தருக்காக வாழ்ந்து சாதிப்போம், பரம கானானனை சுதந்திரமாக பெற்றுக்கொள்வோம். ✮

*சிறுவர் பகுதி*

# சிருஷ்டிப்பின் அதிசயம்

**ABEL. R. NAYAGAM**

**தே**வனுக்குப் பிரிய மானவர்களும், என் அன்புக் குரியவர்களுமான சிறுதம்பி, தங்கைகளே, உங்கள் யாவருக் கும் நம்மைப் போன்றவர்களி டத்தில் பெரிதும் அன்பு காட்டு கின்ற இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இவ்வருடத்தின் மூன்றாம் மாதத்திலே நம் தேவ னுடைய மகத்துவத்தைப் பற்றி சில காரியங்களை அறிந்து கொள்வோமா? வாருங்கள் என்னோடு!.

மனிதனுடைய வரலாறு காலம் முழுவதும் தேவன், அநேக அற்புதங்களை அருமையாகச் செய்துள்ளார். செங்கடலைப் பிளந்து இஸ்ர வேலர்களை எகிப்திய படை கள் அழிக்காமல் பார்த்துக் கொண்டார் (யாத். 14:21-24) யாருடைய கையும் படாமலே எரிகோவின் மதில் நொறுங்கி விழும்படி செய்தார் (யோசுவா 6,20) இஸ்ரவேலர்கள் தங்களு டைய எதிரிகளை தோற்கடிக்க சூரியனை நடுவானில் நிறுத்தி னார். அக்கிரமக்காரர் கையில் அகப்பட்ட தன்குமாரனை மரித்து மூன்று நாளைக்குப் பிறகு, உயிரோடே எழுப்பினார்.

ஆனால், சிருஷ்டிப்பின் அதிசயம் மாத்திரம் நடந்திரா விட்டால், மேலே நாம் பார்த்த இந்த அற்புதங்களெல்லாம் நடந்திருக்க வாய்பேயில்லை. மோசே, ஆதி 1:1-ல் எழுதும் போது ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் என்று எழுதியி ருக்கிறார். அவர் அப்படி எழுதும்போது எல்லா அதிச யங்களிலும் பெரிய அதிசயத் தை ஒரே வரியில் சுருக்கி எழுதி விட்டார். அது தான் சிருஷ்டிப் பின் அற்புதம். ஆறே ஆறு நாட்களுக்குள்ளாக, தேவன் கிரகங்கள், நட்சத்திரக் கூட்டங் கள் மற்றும் குறுங்கோல்களை யும் உள்ளடக்கிய வான மண்ட லங்கள் அனைத்தையும் நடை முறைக்கு கொண்டு வந்து விட்டார். எபிரெய ஆசிரியர், **விசுவாசத்தினாலே நாம் உல கங்கள் தேவனுடைய வார்த் தையினால் உண்டாக்கப் பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்** (எபி. 11:3) என்று சொல்லியுள்ளார். தேவன் சிருஷ்டிப்பை நடத்தின போது, ஏற்கனவே இருந்த பொருளையும், சக்தியையும் பயன்படுத்தவில்லை. தன்னு டைய வார்த்தையின் வல்லமை யினாலே பேசினார், அவை உண்டாயிற்று. (எபி. 1:3).

தேவன் விசேஷித்த ஒன்றான, பூமியையும் படைத்தார். அதன்

மீது அவர் உயிருள்ள செடி, கொடிகளையும், மிருகங்களையும், மனிதனையும் ஏற்படுத்தினார். அப்பொழுது தேவன், பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின் மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனி விருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. பூமியானது புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது; தேவன் அது நல்லது என்று கண்டார் என்று கூறுகிறது. (ஆதி. 1,11, 12) உண்டாகக் கடவது என்றவுடன், அவைகள் உண்டாயிற்று என்பதைக் கவனிக்கவும். தேவன் பேசி கட்டளையிட்டார். அவை அப்படியே ஆயிற்று. தேவன், ஆகாய விரிவிலே சுடர்கள் உண்டாக்கக்கடவது என்றார்? ஆதி. 1;14,15, அது அப்படியே ஆயிற்று அப்படி ஆவதற்கு இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ஆண்டுகள் ஆகவில்லை. உடனே ஆயிற்று.

ஆறாம் நாளில், தேவன், நமது சாயலாகவும், *நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக* என்றார் (ஆதி. 1:26). ஆதி 2:7ம் வசனம், தேவன், மனிதனை, பூமியின் மண்ணினாலே உருவாக்கினார் என்று சொல்கிறது. அதன்பிறகு, அவனுடைய விலா எலும்பிலிருந்து மனுஷியை உண்டாக்கினார். (2:21-22).

இவைகள் எல்லாம் இயற்கையாய் நடந்தவை அல்ல. அதற்கு நேர் மாறாக, இயற்கைக்கு அப்பாற்பட்டவை.

இப்பிரபஞ்சமானது, ஏதோ ஒன்று வெடித்துச் சிதறியதால் திடீரென்று உண்டாகவில்லை. மனுஷன் குரங்கைப் போன்ற முன்னோர்களிலிருந்து வெளிவந்தவனுமல்ல. இப்பிரபஞ்சமும், அதில் உள்ள அனைத்தும் அதிசயமான தேவனால் சிருஷ்டிக்கப்பட்டது.

சங்கீதக்காரன் சொல்லும் போது, பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக. அவர் சொல்ல ஆகும் கட்டளையிட நிற்கும் (33:8-9) என்கிறார். இப்பிரபஞ்சத்தையும், பூமியையும், செடிகளையும், மிருகங்களையும், மனுஷனையும், தேவன், இயற்கையான தொடர் நிகழ்வுகளை கொண்டு சிருஷ்டிக்கவில்லை என்று நமக்கு சொல்லும் வேதாகம வழிமுறை இதுவே. இதற்கு மாறாக, தேவன் ஒரு மிகப் பெரிய அதிசயத்தைச் செய்தார். அது தான் சிருஷ்டிப்பின் அதிசயம் நாம் இன்று இங்கிருப்பது அந்த அதிசய நிகழ்வினால் தான். ஆகவே, நாம், அன்பும் வல்லமையும் கொண்ட தேவனை நம் பரம பிதாவாக கொண்டிருப்பதற்காக நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

அருமை தம்பிகளே! தங்கைகளே, நாம் நன்றியுள்ளவர்களாய் இருப்போம். நல்லாசீர்வாதம் பெறுவோம். ஆமென்.

மனன வசனம் : சங்கீதம் 33:8,9

# உலகத் தோற்றத்திற்கு முன்னமே

**ஜே. பிக்கின்ஸ்**

ஒருவராய் ஒப்புவமையில்லா தேவனாயிருக்கிற யெகோவா, ஒளியாயிருக்கிறார் என்பது நாமறிந்ததே. அகிலத்தையும், ஆகாயத்தையும் உருவாகிய போது, முதலிலவர் உண்டாக்கியது வெளிச்சமே. பரம குயவன் குவலயத்தை படைத்த போது பாய்ந் தோடும் நதியையும், அது சேரும் ஆழியையும், ஆர்ப்பரிக்கின்ற ஆழியின் அடியில் நீந்தும் மீன்களையும், வானத்து மச்சங்களை யும், கர்ச்சனை செய்யும் சிம்மம் தொடங்கி, தலைவன் இல்லாதி ருந்தும் வரிசையில் செல்லும் சிறு எறும்பு முடிய உருவாக்கின விண்ணவர், இவைகளுக்கெல்லாம் மகுடமாக மனிதனை மண்ணி லிருந்து உருவாக்கினார். ஆனால், இவைகள் உதயமாகும் முன்ன மே, உன்னத தேவன் உயரியதோர் திட்டத்தை தனது ஆதீனத்தில் வைத்திருந்தார் என்பதை நீங்களும் அறிய வேண்டுமென்பதே எனதளவிலா ஆசை.

**முன்னவரின் முதலாம் வருகை :**

தன் பிரியப் பிதாவிற்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின தாக எண்ணாமல், அடிமையின் ரூபமெடுத்து மனித சாயலாக உதித்தவர், தற்செயலாக உதித்தாரென்று எண்ணலாகாது. இவ்விஷயத்தைக் குறித்துப் பேதுரு ஆசிரியர் கூறுவதைக் கவனி யுங்கள், "*அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்ட வராயிருந்து*, தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்க ளுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார்" (1பேதுரு. 1:20).

விவிலியம் விளம்புவதை கவனித்தீர்களா! ஆதரையில் அவதரித்தவர் திட்டமிடாமல் திடீரென்று வந்துவிடவில்லை. ஆண்டவரின் முதலாம் வருகையும், மனிதனை மீட்கும் தேவ திட்டமும், உலகம் உருவாவதற்கு முன்னமே உருவாகியிருக்கி றது. அருமையானவர்களே! மீட்பின் திட்டம் எத்தனை முக்கிய மானது என்பதை நாம் யோசிக்க வேண்டும். அத்திட்டம் ஆதி முதலே உருவானது. நமது ஆண்டவர் பாரச் சிலுவை சுமந்து, தனது மாசில்லா குருதி சிந்தி, நமக்காக கொடூரமான சிலுவை மரணத்தை அனுபவித்தது, சடுதியில் நடந்த ஒன்றல்ல, ஞாலம் உருவாக்க தேவன் தனது அநாதி ஞானத்தைக் கொண்டு உருவாக் கின திட்டத்தின் வெளிப்பாடு தான் இது. இவ்வுண்மையே நாம் உணர்ந்திடுவது சிறந்தது, அத்தோடு நில்லாமல் உலகிற்கு உரைத்தி டுவது சாலச் சிறந்தது.

**நல்லாண்டவரின் நற்செய்தி :**

பரமபிதாவின் சித்தம் செய்து முடித்த பாசமிகு குமாரன் பரமேறி செல்லுவதற்கு முன் தமது அப்போஸ்தலர்களையும், மற்றவர்களையும் நோக்கி, தாம் கட்டளையிட்ட யாவையும்

வையகம் முழுமையும் சென்று பிரசங்கிக்கச் சொன்னார். அதை மனதாரக் கேட்டு, முழு இருதயத்துடன் விசுவாசித்து, திருமுழுக் குப் பெறுபவன் மீட்கப்படுவான் என்பதை எடுத்துரைத்தார். ஆண்டவர் சொற்படி எருசலேமில் காத்திருந்த அப்போஸ்தலர்கள் மேல், உன்னத பெலன் இறங்கிற்று. தேவ ஞானத்தால் நிறைந்து, மீட்பின் திட்டத்தை அவர்கள் வெளிப்படுத்தினார்கள் (அப். 2 அதிகாரம்).

இப்படி, அப்போஸ்தலர்கள் ஆவியில் நிறைந்து செய்த பிரசங்கத்தைக் குறித்து, அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவதை கவனியுங்கள். உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம். (1கொரி. 2:7). என்கிறார். எனக்கருமையானவர்களே! கவனித்தீர்களா! கர்த்தரின் கிருபையை!! நம்மை மீட்கும்படி இயேசுவை இவ்வுலகத்திற்கு அனுப்புவதையும், அவர் சகலத்தையும் நமக்காக செய்து முடித்து, வெற்றி வேந்தராக விண்ணகமடைந்த பின் ஆவியானவர் அனுப் பப்பட்டு சுவிசேஷம் வெளிப்படும் என்பதையும் பிதா தனது ஆதீனத்தில் வைத்திருக்கிறார். ஆக அப்போஸ்தலர் பேசினது, மனித ஞானமல்ல இறை அறிவு.

**நமது தெரிந்து கொள்ளுதல்**

தேவன் நம்மைத் தெரிந்து கொண்டதைப் பற்றி அப்போஸ் தலனாகிய பவுல் கூறுகையில், தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் " ***உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே***". (எபேசியர் 2:4) என்கிறார். இதை வாசிக்கிறவர்களே! சிந்திப்பீர், நமது மீட்பையும், அது யாருக்குள் இருக்கிறது என்பதையும் தேவன் நம்மை படைக்கும் முன்பே தீர்மானித்து, திட்டமிட்டு தனது அநந்த ஞானத்தினால் உண்டாக் கியிருக்கிறார். இதை நாம் அறியும்போது, நமதுள்ளம் புளகாங் கிதமடைகிறது என்பது இளம்பரிதியின் உதயம் போன்று உண்மையாயிருக்கிறது என்பதை என்னோடு நீங்களும் ஒப்புக் கொள்ளுவீர்கள் என நம்புகிறேன்.

நம்மை உண்டாக்கினவர் பரிசுத்தமாயிருப்பது போல நாமும் பரிசுத்தராக இருந்திடல் வேண்டுமென்றும், குற்றமில் லாது இருந்திடல் வேண்டுமென்றும் எண்ணியிருக்கிறார். அவர் எண்ணுவதோடு நிறுத்தாமல், அதை நடைமுறைப்படுத்துவதற்கு தான் என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவை அனைத்தை யும் செவ்வனே செய்து முடித்திருக்கிறார். இதை நாம் உணர்ந்த வர்களாக, அவர் ஆதி முதலே திட்டமிட்ட மீட்பை அடைய அவர் என்ன கட்டளையிட்டிருக்கிறாரோ அதற்குக் கீழ்ப்படிந்து, மோட்ச கறை ஏறுவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வோம் பரமன் பாதுகாப்பார்! பத்திரமாய் சேர்ப்பார். ✯

# " துருவின் சாட்சி " நூலில் இருந்து

## பாடம் - 7 துருவின் சாட்சி

## தசமபாகம் பற்றிய காரியங்கள்

**(சென்ற மாதத் தொடர்ச்சி)**

**II தசம பாகத்தைப் பற்றிய பிரமாணம் எப்போது முடிவுக் வந்தது?**

"நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து சிலுவையின் மேல் ஆணியடித்து" என்று வாசிக்கிறோம் (கொலோ. 2:14)

இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது பழைய பிரமாணத்தை நீக்கி விட்டார் அல்லது நீக்கிப்போட்டார். ஜனங்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ் எப்படி மிருகங்களின் இரத்தத்தை பலியாகச் செலுத்தினார்களோ அதைப் போலவே, நியாயப்பிரமாணத்தின் கீழ் தசமபாக பிரமாணத்தையும் அனுசரித்தார்கள். இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே (கலாத்தியர் 3:24,25) நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிராமல் கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது. (ரோமர் 6:14) அன்றியும், ஒழிந்து போவதே மகிமையுள்ளதாயிருந்ததானால் நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதாயிருக்குமே. (II கொரிந்தியர் 3:11). இந்த வசனங்களையெல்லாம் வாசித்து விட்டு ஒருவரால் மோசேயின் பிரமாணமும், முற்பிதாக்களின் பிரமாணமும் இன்னும் நம்மை கட்டுப்படுத்துகிறது என்று வாதிடவே முடியாது. கிறிஸ்துவின் காலத்தில் தசமபாக பிரமாணம் நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை என்ற முடிவுக்கு வந்தாக வேண்டும்.

அப்படியானால், இது இந்த கிறிஸ்துவின் காலத்தில் கர்த்தருக்கென்று காணிக்கை கொடுக்கத் தேவையில்லை என்று பொருள்படுமா? அல்லது அந்த யூதர்களைப் போல நாம் உதாரத்துவமாய் கொடுக்க வேண்டும் என்று தேவன் நம்மிடமிருந்து எதிர்பார்க்கவில்லை என்று தான் பொருள்படுமா? நான்காயிரம் ஆண்டுகளாக நான் மனிதனிடம் எப்படிக் கொடுக்க வேண்டும் எப்போது கொடுக்க வேண்டும், எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று சொன்னேன், ஆனால், இப்போது நீங்கள் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ நீங்கள் விரும்புகிறபடி

கொடுக்கலாம் என்று தேவன் நம்மிடம் சொல்லுகிறாரா? இந்த கிறிஸ்துவின் காலத்தில் வாழும் உங்களுக்கு கொடுக்க மனதில் லையென்றால் அதை மறந்து விடுங்கள். உங்களுக்கு நீங்களே நியாயாதிபதிக ளாயிருக்க நான் உங்களை விட்டு விடுகிறேன். இப்படிப்பட்ட முட்டாள்தனமான காரியங்களை யார் நம்புவார் கள்? ஆயினும், சில கிறிஸ்துவின் சபை அங்கத் தினர்கள் பேசும் விதத்தைப் பார்த்தால் இதைத்தான் அவர்கள் நம்புகிறார்கள் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

இது உண்மையென்றால், கொடுப்பதில் பொய் சொன்ன தற்கு தேவன் ஏன் அனனியாவையும், சப்பீராளையும் அடித்தார்? (அப். 5). இது உண்மையென்றால் இயேசு ஏன் வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயி ராவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று சொன்னார்? இந்த வார்த்தைகளில் இயேசு கொடுப்பதைதத் தவிர வேறு எல்லாக் காரியங்களைப் பற்றியும் தான் பேசினாரா? யூத மார்க்கத்தை விட்டு வந்தவர்களிடம் அவர்களுடைய மனதில் பத்தில் ஒரு பங்குக்கும் குறைவாகக் கொடுத்தாலே போதும் என்று சொல்லப்பட்டிருக்குமா? இந்த யூதர்கள் கிறிஸ்தவர்களாவதற்கு முன்பு கிட்டத்தட்ட மூன்று தசமபாகம் (30%) அளவுக்குக் கொடுத்து வந்தவர்கள், கிறிஸ்தவர்கள் கொடுக்க வேண்டிய விகிதாச்சாரம் பத்தில் ஒரு பங்குக்கு குறைவாக இருக்க வேண்டும் என்று சொல்வது, யூதமார்க்கம் கிறிஸ்தவத்தை விட தரத்தில் உயர்ந்தது என்றும், ஒரு கிறிஸ்தவன் ஒரு யூதனைவிட சுயநலவாதி என்றும் பொருள்படும்.

## III புதிய ஏற்பாடு உதாரத்துவத்தை போதிக்கிறது

புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுகிறதிலும் தரித்திருக் கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன் (ரோமர் 12:8).

பழைய ஏற்பாடு தசம பாகம் பற்றி போதித்தது. புதிய ஏற்பாடு உதாரத்துவம் பற்றி போதிக்கிறது. அடிக்கடி ஒருவர் கொடுத்தலைப் பற்றிய பிரசங்கத்தை கேட்கும் போது, அவர் தன்னுடைய பொறுப்பை தவிர்க்க, பிரசங்கியாரைப் பார்த்து, வேதாகமம் நாம் பத்தில் ஒரு பங்கை கொடுக்க வேண்டும் என்று போதிக்கிறதா? என்று கேட்பார். இல்லை, வேதாகமம் நாம் தசம பாகம் கொடுக்க வேண்டும் என்று போதிப்பதில்லை. அதே வேளையில், பத்தில் ஒரு பங்குக்குக் குறைவாக கொடுக்க வேண்டும் என்றும் போதிப்பதில்லை. நாம் நியாயப்பிரமாணத் தின் கீழ் இல்லாமல் கிருபையின் கீழ் இருக்கிறோம் என்பது உண்மையென்றாலும், அது கொடுக்க வேண்டிய பொறுப்பைக் குறைத்து விடாது. நம்மிடம் அதிகமாக கொடுக்கப்பட்டிருக்கிற

படியால் நம்மிடமிருந்து குறைவாக எதிர்பார்க்கப்படும் என்று நினைக்கிறீர்களா? (லூக்கா 12:48). நமக்கு வாய்ப்புகள் அதிக மாக இருக்கிறபடியால் நமக்கு பொறுப்புகளும் அதிகமாக இருக்கிறது என்று தான் இயேசு போதித்தார். மல்கியாவின் நாட்களில் யூதர்கள் மங்கலான ஒளியில் வாழந்து கொண்டிருந் தார்கள்,. நாமோ இந்த நாட்களில் பிரகாசமான ஒளியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தேவன் அவர்களிடமிருந்து தசமபாகத்தை எதிர்பார்த்தார். ஆனால், அவர்கள் அப்படிக் கொடுக்க மறுத்து, தேவனை வஞ்சித்ததினால் குற்றவாளிகளாக தேவனால் கருதப் பட்டார்கள்.

உதாரத்துவம் என்பதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்வதற்கு ஓர் உதாரணத்தை பார்க்கலாம். உங்கள் பிராந்திய சபையில் மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்கிற நூறு யூதர்கள் இருப்ப தாக நினைத்துக் கொள்ளுங்கள். பக்தியுள்ள யூதர்கள் எல்லா ருமே தங்கள் வருமானத்தில் தோராயமாக முப்பது சதவீதத்தை கர்த்தருக்குக்கென்று கொடுத்தார்கள் என்பதை நாம் அறிவோம். ஆகையால், நீங்கள் கூடிவருகிற சபையில் வாரம் நூறு ரூபாய் சம்பாதிக்கும் நூறு யூதர்கள் இருந்தால் வாரக் காணிக்கை 3000 ரூபாயாகும். அவர்கள் வாரம் ஐம்பது ரூபாய் மாத்திரம் சம்பாதித் தால் காணிக்கை 1500 ரூபாய்களாகும். நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்கின்ற யூதர்களோடு நம்முடைய காணிக்கையை ஒப்பிட் டுப் பார்த்தால் சபை அங்கத்தினர்கள் அநேகர் வெட்கத்தில் தலை யைத் தொங்கப் போட்டுக் கொள்ள வேண்டியதாயிருக்கும். இதைப் பற்றி நாம் சிந்திக்கும் போது, நம்முடைய கர்த்தர் சொன்னதை நினைவில் கொள்வோம், வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும், உங்கள் நீதி அதிகமாயிரா விட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 5:20) யூதர்களுடைய மார்க்கமானது ஒரு தேச அளவில் தான் இருந்தது. ஆனால், நம்முடைய மார்க்கமோ உலகளாவிய மார்க்கமாக இருக்கிறது. எனவே, நம்முடைய பொறுப்புகள் மாபெரும் பொறுப்புகளா யிருக்கிறது. வேதாகமத்தில் ஒருவர் கூட பத்தில் ஒரு பங்குக்கு குறைவாக தேவனுக்குக் கொடுத்ததில்லை என்று வாசிக்கிறோம். பர்னபாவும், அந்த ஏழை விதவையும் தங்களுக்கு உண்டான எல்லாவற்றையும் கொடுத்தார்கள். பத்தில் ஒரு பங்கு, இருந்த எல்லாம் ஆகிய இந்த இரண்டையும் கவனிக்கும்போது, உதாரத்துவமாய்க் கொடுப்பதற்கான அளவு எவ்வளவாக இருக்க முடியும் என்பதை சுலபமாகத் தீர்மானிக்க முடியும்.

புதிய ஏற்பாட்டு கொடுத்தலை மீட்டமைக்க உதவி செய்வீர்களா?. ✯

தொடர் கட்டுரை

# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

K. பாஸ்கர்

## பாடம் - 5. ஒரே விசுவாசம்

**வ**சன ரீதியான கிறிஸ்துவின் என்ற நமது பாடத்தில் இம்மாதத்தில் ஒரே விசுவாசம் என்ற பாடத்தைப் படிப்போம்! முதல் நூற்றாண்டு சபை மூப்பர்கள், உதவிக்காரர்கள் என்ற தகுதியைப் பெற்றதற்குக் காரணம் அவர்களிடத்தில் காணப்பட்ட ஒரே விசுவாசம் தான். அதில் வேகமாக வளர்ந்தபடியால் மூப்பர்கள், உதவிக்காரர்கள் என்று சபை வளர்ந்தது! அன்று ஒரே ஒரு உபதேசம் இருந்தபடியால் ஒரே விசுவாசமும் காணப்பட்டது. ரோமாபுரி சபையாரின் ஒரே விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமானது. (ரோ. 1:8) அதே போல தெசலோனிக்கே பட்டணத்திலுள்ள சபையாரிடத்தில் இந்த ஒரே விசுவாசம் மிகவும் பெருகியிருந்தது. (II தெச. 1:3) இந்த ஒரே விசுவா சத்திற்காகத்தான் நாமும் அழைக்கப்பட்டிருக்கிறோம் (எபே. 4:5).

### I விசுவாசம் என்றால் என்ன?

விசுவாசம் என்றால் நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது (எபி. 11:1) தேவன் ஒருவர் இருக்கின்றார் அவர் கடந்த காலத்திலும், நிகழ் காலத்திலும், வருங்காலத்திலும் செயல் புரிந்து வருகிறார் என்று பழைய ஏற்பாட்டில் வாழ்ந்தவர்கள் நம்பினார்கள். அந்த நம்பிக்கையில் உறுதியுடன் காணப்பட்டு அதினால் நற்சாட்சி பெற்றனர். (எபி. 11:2). காணப்படு கின்ற காரியங்களை நம்புகிறது நம்பிக்கையல்ல ஒருவன் தான் காண்கிறதை நம்ப வேண்டுவதென்ன? (ரோம 8:24) ஆகையால், விசுவாசம் என்றால் காணப்படாத காரியங்களை நம்புவது. அதுதான் விசுவாசம் ஆகும்.

இன்னு நம்மிடையே பல விசுவாசங்கள் இருக்கிறது. காரணம் என்னவென்றால், பல உபதேசங்கள் இருக்கிறபடியால் பல விசுவாசங் கள் உள்ளன. உதாரணமாக, இயேசு கிறிஸ்துவைப் பற்றிய உபதேசங் கள் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ளதால் தான் அவரை விசுவாசிக்கிறோம் (ரோ. 10:14-17) அவர் எப்படி இருப்பார் என்று யாரோ ஒருவர் வரைந்ததைப் பார்த்து நம்புவது விசுவாசமாகாது. இன்று நம்மிடைய இந்தப் போட்டோ தான் பிரபலமாக இருக்கிறது. யாரோ ஒருவர் கற்பனை செய்து வரைந்து இதுதான் இயேசு கிறிஸ்து என்று அழியும் பொருளோடு அழியாத வரை ஒப்பிடுகிறார்கள் (ரோம 1:19-23) உண்மையென்னவென்றால் இன்று நம்மிடையே உள்ள போட்டோவைப் போல பல வித்தியாசப்பட்ட போட்டோ வரையப்பட்டுள்ளது. ஆப்பிரிக்கா மக்களைப் போலவும், ஆதிவாசி மக்களைப் போலவும் இயேசு அவர்களைப் போல வரையப்பட்டுள் ளார். இன்று நம்மிடையே உள்ள போட்டோவானது ஐரோப்பியர் களாலே கொண்டு வரப்பட்டதாகும். இதையும் விசுவா சிக்கின்றனர். அதை பத்திரிக்கைகளில் அச்சிடுகின்றனர். இது விக்கிரக ஆராதனைக்கு ஏதுவாயிருக்கிறது. ஆகையால் எனக்கு பிரியமானவர் களே விக்கிரக ஆராதனைக்கு விலகி ஓடுங்கள் (1கொரி. 10:14).

இயேசு கிறிஸ்து இப்படி இருப்பார்! அப்படி இருப்பார் என்று நாம் ஏன் யூகிக்க வேண்டும்? நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம். (II கொரி. 5:6). அவரை நீங்கள் காணாமல் இருந்தும்

அவரிடத்தில் அன்பு கூறுகிறீர்கள். இப்பொழுது அவரைத் தரிசியமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய் களிகூர்ந்து உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள் (1பேதுரு 1:8,9) என்று வேதம் கூறுகிறதே! விசுவாசம் என்பது வேத வசனத்தில் வருவதாகும். (ரோம 10:17) விசுவாசத்தின் இலக்கணமே காணப்படாதவைகளை விசுவாசிப்பதாகும் (எபி. 11:1)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்து அப்போஸ்த லருக்குத் தரிசனமானார். அப்பொழுது, அவருடைய சீஷரில் ஒருவர் தோமா என்பவர் அப்பொழுது இல்லை. ஆதலால் அவர் இயேசு கிறிஸ்து உயிர்ந்தெழுந்தார் என்பதை நம்பவில்லை! மறுபடியும் இயேசு கிறிஸ்து எட்டு நாட்களுக்குப் பிறகு அப்போஸ்தலருக்கு தரிசனமானார். அப்போது தோமாவும் இருந்தார். அவர் தோமாவைப் பார்த்து, நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார் உன் கையை நீட்டி என் விலாவிலே போடு அவிசுவாசயாயிராமல் விசுவாசியாயிரு... நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய் காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார் (யோவான். 20:25-29).

நம்மில் பலர் இயேசு கிறிஸ்து சிலுவையை சுமந்து கொண்டு செல்லுகையில் ஒரு ஸ்திரீ அவருடைய முகத்தை துடைப்பதாகவும் அந்த முகம் அப்படியே துணியில் ஒட்டிக் கொண்டதாகவும் நம்புகின்றனர். ஆனால், வேதத்தில் அப்படி ஒரு நிகழ்ச்சி நடந்ததாகக் கூறுவதில்லை. இயேசு கிறிஸ்து சிலுவையை சுமந்து கொண்டு போகையில் எருசலேம் குமாரத்திகள் அழுதார்கள் அப்பொழுது அவர் அவர்களைப் பார்த்து நீங்கள் எனக்காக அழ வேண்டாம் உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். என்றார். (லூக். 23:26-28) இந்த நிகழ்ச்சியில் எருசலேம் குமாரத்திகளில் ஒருத்தி அவருடைய முகத்தைத் துடைத்தாகவோ, அவருடைய முகம் அப்படியே ஒட்டிக் கொண்டதாகவோ இல்லை. வேத வசனத்தில் வராத யாவுமே பாவமே (ரோ. 14:23).

நாம் ஒரே விசுவாசத்திற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம் (எபே. 4:5) அந்த ஒரே விசுவாசம் மனித பாரம்பரியத்தைக் கொண்டதாக இருக்கக்கூடாது. வேத வசனத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

**II விசுவாசமும், கிரியைகளும்**

இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசமானது கிரியைகளைக் கொண்டது. அதாவது, கிறிஸ்தவ செயல்களைக் கொண்டதாக உள்ளது. உதாரணமாக, இயேசு கிறிஸ்து கூறும்பொழுது நல்ல மரம் நல்ல கனிகளைக் கொடுக்கும் கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும் (மத். 7:17) என்றார். இங்கே ஒருவன் நல்லவன் நல்ல செயல்களைச் செய்வான் என்றும், கெட்டவன் கெட்ட செயல்களைச் செய்வான் என்றும் கூறுகின்றார். கிறிஸ்தவன் கிறிஸ்துவைப் போல நல்ல செயல்களைச் செய்ய வேண்டும். ஒரு கிராமத்தில் கிறிஸ்துவின் சபை இருக்கிறதென்றால் அந்த கிராமத்திலுள்ள மக்கள் சபையின் மூலமாக பல நன்மைகளைப் பெற வேண்டும். அந்த நன்மைகளில் சுவிசேஷம் என்ற நற்செய்தியும் அடங்கியிருக்க வேண்டும். அதுதான் விசுவாசமும், கிரியைகளும். நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது. இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்தி லிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது (மத். 5:14,16).

சபையின் வளர்ச்சிக்கு விசுவாசமும், கிரியைகளும் முக்கிய மாக உள்ளது. நம்மிடத்தில் உள்ள விசுவாசம், விசுவாசத்திற்குரிய காரியங்களைச் செய்வதற்கு உந்தித் தள்ள வேண்டும். சுவிசேஷத்தை விசுவாசித்தவர்கள் உடனே ஞானஸ்நானம் பெற வேண்டும் (அப். 18:8) ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் ஆராதனைக்குச் செல்ல வேண்டும். (எபி. 10:25) ஆராதனைக்குச் சென்று கொண்டி ருப்பவர்கள் சுவிசேஷ வசனத்தை பிறருக்கு சொல்ல வேண்டும். (அப். 8:4) அல்லது சுவிசேஷத்தை சொல்லுகிறவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் (1 கொரி. 9:14). இவ்விதமாக விசுவாசி விசுவாசத் தினாலே நடக்க வேண்டும் (II கொரி. 5:6) விசுவாசத்தினாலே பிழைக் கின்றோம் (ரோம 1:17) விசுவாசத்தினாலே நிற்கின்றோம் (ரோம 11:20) விசுவாசத்தினாலே பேசுகின்றோம் (II கொரி. 4:13) நம்மிடத்தி லிருக்கும் விசுவாசத்தை வைத்துக்கொண்டு ஆவிக்குரிய காரியங் களைச் செய்ய வேண்டும்.

விசுவாசத்தினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள். எப்படி என்றால் தங்களிலுள்ள விசுவாசத்தை செயல்படுத்தி அதினா லே நற்சாட்சி பெற்றார்கள். உதாரணமாக, ஆபேல் விசுவாசத்தினா லே காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்கு செலுத்தினான். நோவா விசுவாசத்தினாலே பேழையை உண்டு பண்ணினார், விசுவாசத்தின் தகப்பன் ஆபிரகாம் விசுவாசத்தினாலே போகும் இடம் எதென்று அறியாமல் புறப்பட்டு போனார். (எபி. 11:4-8) தேவன் அழைத்த போது ஆபிரகாமுக்கு வயது 75. அந்த வயதிலும் சரீரம் செத்துப் போனவனிடத்தில் வானத்திலுள்ள பெருக்க மான நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரையிலுள்ள எண்ணிறைந்த மணலைப் போலவும் பெருகப் பண்ணுவேன் என்ற வாக்குத்தத்தங் களை விசுவாசித்தார், அந்த விசுவாசத்தில் அவர் பெலவீனமாக இல்லை (ஆதி. 15:5,6; ரோம. 4:18,19).

புதிய ஏற்பாட்டில் பர்னபா என்பவர் விசுவாசத்தினாலே தனக்கு உண்டாயிருந்த நிலத்தை விற்று அதின் கிரயத்தைக் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்து ஆறுதல் படுத்தினார் (அப். 4:36,37) அவர் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும், விசுவா சத்தில் நிறைந்தவனுமாயிருந்தபடியால் அநேக ஜனங்கள் கர்த்தரிட மாய் சேர்க்கப்பட்டனர். (அப். 11:24).

இன்று ஆபிரகாம், பர்னபா என்பவர்களுடைய பெயரை வைத்துக்கொண்டு பல தவறுகளை செய்து கொண்டு, தவறோடு ஒத்துபோய் விசுவாசத்திற்கு துரோகம் செய்கின்றார்கள். இது ஒட்டு மொத்தமாக சபையை பாதிக்கிறது. ஒருவர் செய்யும் தவறுகளி னாலே சபையின் பெயர் கெடுகிறது. நமது ஜீவியத்தில் விசுவாசக் கிரியை முக்கியமாக உள்ளது. வேதாகமத்தில் ஆபிரகாம், பர்னபா என்பவர்களுடைய நல்ல முன் மாதிரிகளும், கெட்ட முன் மாதிரி களான இமெனேயும், அலெக்சாந்தரும் உண்டு. இப்படிப்பட்டவர்கள் விசுவாசக் கப்பலை சேதப்படுத்தினார்கள். (1தீமோ 1:19,20).

விசுவாசம் கிரியைகளினாலே வெளிப்படுத்தப்படுகிறது. கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது (யாக். 2:17,20) தனக்கு விசுவாசம் இருக்கிறது என்று சொல்லி முதலாவது தேவனு டைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடாவிட்டால் அந்த விசுவாசம் வீணான விச்வாசம் (மத். 6:33) ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது போல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்த தாயிருக்கிறது (யாக். 2:26).

**III விசுவாசத்தின் பலன்**

நாம் கிறிஸ்து இயேசுவில் கொண்டிருக்கும் ஒரே விசுவாசம் கிரியை உள்ளதாக இருக்கிறது. அந்த விசுவாசத்தின் பலன் நித்திய ஜீவனைக் கொடுக்கின்றது. தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவ. 3:16). நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதின் நோக்கம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதே.

பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன். (ரோம 6:23) பாவத்தின் பிரதிபலனாக வியாதி, துன்பம், மரணம் வருகிறது. அதாவது, நித்திய மரணம் வருகிறது. இதிலிருந்து மீட்கும்படிக்கு இயேசு கிறிஸ்து வந்தார். நித்திய ஜீவனைக் கொடுக்கும்படிக்கு வந்தார். இந்த நித்திய ஜீவன் குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு அளிக்கப்படுகிறது (யோவான் 3:36) இவ்வுலக வாழ்க்கையிலே இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்வுலக வாழ்க்கையே இன்பம் என்று எண்ணி வாழ்ந்த ஞானிசாலமோன் முடிவிலே அவைகள் மெய்யான இன்பம் இல்லை என்று அறிந்து எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமாயிருக்கிறது என்றார். (பிர. 2:1-11)

அநேகர் இவ்வுலகம் என்றும் அழியாது என்று நினைத்து தேவனுக்கு முதலிடம் கொடுக்காமல் இவ்வுலகத்திற்கும், இவ்வுலக இன்பங்களுக்கும் முதலிடம் கொடுத்து வருகிறார்கள். ஆனால், வேதம் இவ்வுலகமும், இவ்வுலகத்தில் உண்டான எல்லாம் அழிந்து போகும் என்று தெளிவாகக் கூறுகிறது (II பேதுரு. 3:10) தேவனால் படைக்கப்பட்ட இவ்வுலகம் நிரந்தர மற்றவையாகவும் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் இவ்வுலகம் இருக்கும். அதாவது மனிதர்கள் உயிரோடு இருக்கும் வரை இவ்வுலகம் இருக்கும். மனிதர்கள் உயிரோடு இருக்கும் நாளிலே அழிந்து போகும் வாழ்க்கையில் அழியாமையை தேடிக் கொள்ள வேண்டும். அது தான் நித்திய ஜீவன் (ரோம. 2:7).


பழைய ஏற்பாட்டில் இதைக் குறித்து வாக்குத்தத்தம் கொடுக்கப்படவில்லை. இருப்பினும் பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த சில பக்திமான்கள் பரமதேசத்தை விரும்பி விசுவாசத்தோடே மரித்தார்கள் (எபி. 11:13-16) நித்திய ஜீவனைக் குறித்த வாக்குத்தத்தம் கிறிஸ்துவின் மூலமாக வருகிறது. விசேஷமாக அவர் உயிர்த்தெழுந்ததினாலே மறுமையைக் குறித்த நம்பிக்கை உண்டாயிருக்கிறது (1கொரி. 15:17-21) கிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்ளும் விசுவாசிக்கு நித்திய ஜீவனைக் குறித்த வாக்குத்தத்தம் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிறது (1யோ. 2:25) பொய்யுரையாத தேவன் ஆதிகால முதல் நித்திய ஜீவனைக் குறித்த வாக்குத்தத்தம் பண்ணி அதைக் குறித்த நம்பிக்கையைப் பற்றி தேவ பக்திக் கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும் விசுவாசமும் தேவன் தெரிந்து கொள்ளப் பட்டவர்களுக்கு உண்டாகும்படி... என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார் (தீத்து 1:3).

இவ்வுலக வாழ்க்கையில் வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம் என்று வாழாமல், நம் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தத்தைக் கொடுப்போம். நித்திய ஜீவனுக்காகவே அழைக்கப்பட்டிருக்கிறோம். (1 தீமோ. 6:12) நித்திய அழிவுக்காக அழைக்கப்படவில்லை. என்வே இப்போதே சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவோம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாயிருப்போம்!. ✯

**(தொடரும்)**

# BIBLE MEDITATION

## TV PROGRAM




### கிருபையுள்ள வார்த்தை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


பேச்சாளர் : சகோ. பிலேமோன் ராஜா, மதுரை.

| | | | |
|---|---|---|---|
| இமயம் | TV | சனி | காலை 7:45 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | காலை 7:45 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு 10:00 மணி |

### கிறிஸ்துவின் வசனம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : சகோ. அர்ச்சுனன், வத்தலக்குண்டு.

| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை 6:00 மணி |
| இமயம் | TV | புதன் | காலை 6:30 மணி |





**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**


| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |


Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.

Licensed to Post without pre payment No: TN / WR / ERD / 03 / WPP / 2009-20111


( தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம் )

**திருமறை தியானம்**

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |
| இமயம் | TV | ஞாயிறு | காலை | 6:30 | மணி |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |

சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

- ஆசிரியர்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.


...kumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.